Registered as a news paper. பக்கங்கள்: பதினான்கு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.] (சி/2494)

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 புரட்டாதி 03 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 03 (19.09.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:353

# சமாதானப் பேச்சுக்களில் புலிகள் ஆர்வமில்லை என்ற ஜனாதிபதி செயலக அறிக்கைக்கு புலிகள் கடும் விசனம் தெரிவிப்பு!



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வருவதற்கு தாமதம் காட்டி வருவதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கை குறித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடும் அதிருப்தியை வெளியிட்டிருப்பதுடன் –

இந்த அறிக்கையானது அரசாங்கம் சமாதானப்பேச்சுக்களிலிருந்து விலகிச்செல்கின்றதோ என்ற சந்தேகத்தை தமிழ்மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தென்னிலங்கை பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பித்த இந்தச் சந்திப்பு காலை 11.30 மணி வரை இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடைமுறைக்குப் புறம்பான விடயங்களை அரசாங்கம் கூறிவருவதால் – அதற்கு பேச்சுக்களில் ஆர்வமில்லை என்றே நாம் கருத வேண்டியுள்ளது.

இறுதித்தீர்வு ஒன்றுக்கு அரசாங்கம் தயாராக இல்லை. புதிய அரசியலமைப்பு அதிகாரப்பகிர்வு நிலைப்பாடு உருவாக்கப்படமுடியாத சந்தர்ப்பத்தில் இறுதித்தீர்வு பற்றிப் பேச முடியாமல் உள்ளது.

எனவே அதற்குள் இடைக்காலத் தீர்வு ஒன்றைக் காண்பதே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்புவாழ்க்கைக்கு வழி கோலும் என்பதாலேயே இடைக்காலத் தீர்வு பற்றிப் பேசுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் முன்னைய அரசாங்கமும் இணக்கம் கண்டிருந்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் கெடுபிடிகள் மட்டக்களப்பில் அதிகரிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடிப் பாலம், ஏறாவூர், ஓட்டமாவடிப் பாலம் ஆகிய இடங்களில் பயணிகளின் வாகனங்களை படையினர் கடுமையாக சோதனை செய்வதாகவும், அவர்கள் துருவித் துருவி விசாரணை செய்யப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்களான வவுணதீவுப் பாலம், செங்கலடி கறுத்தப்பாலம், அம்பிளாந்துறை ஆகிய இடங்களில் படையினரின் சோதனைக் கெடுபிடிகளால் தாம் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

## கொழும்பு நகருக்குள் புலிகள் ஊடுருவலாம்!

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களைக் கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதல் பிரிவு கொழும்புக்கு ஊடுருவியுள்ளதை பொலிஸ் குற்றவியல் ஆய்வுக்குழு கண்டுபிடித்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

...குதல் பிரிவு, ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி, மற்றும் வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோரை கொலை செய்வதற்கே இங்கு வந்துள்ளனர் என்றும், இவர்கள் பற்றி அவதானமாக இருக்குமாறும் உள

## ஈ.பி.டி.பி. புத்தளம் அமைப்பாளர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்!



(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான பவான் எனப்படும் தம்பித்துரை சிவகுமார் (வயது 41) நேற்றுக் காலை 11.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களைக் கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதல் பிரிவு கொழும்புக்கு ஊடுருவியுள்ளதை பொலிஸ் குற்றவியல் ஆய்வுக்குழு கண்டுபிடித்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் தங்கியுள்ள இந்தத் தாக்குதல் பிரிவு, ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி, மற்றும் வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோரை கொலை செய்வதற்கே இங்கு வந்துள்ளனர் என்றும், இவர்கள் பற்றி அவதானமாக இருக்குமாறும் உளவுப் பிரிவினருக்கு குற்றவியல் ஆய்வுக் குழுவினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இந்தக் கரும்புலித் தாக்குதற் பிரிவில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணப் பெண் ஒருவரை திருமணம் செய்து கொழும்புக்கு வந்து நடமாடி வருவதாகவும் இவர்கள் பற்றி அவதானமாக இருக்குமாறும், ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (தே)

நான் என் உயிரிலும் மேலாக நேசிக்கும் உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.





(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான பவான் எனப்படும் தம்பித்துரை சிவகுமார் (வயது 41) நேற்றுக் காலை 11.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தில்லையடியிலுள்ள கட்சி அலுவலகத்திலிருந்து தனது சைக்கிளில், அருகிலுள்ள வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த சமயம், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ பீட மாணவி போராட்டத்தை கைவிட்டார்

(யாழ்ப்பாணம்)

தனது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி, யாழ் பல்கலைக்கழக வளாகத்தினுள் தங்கியிருந்து போராட்டம் நடத்திய மருத்துவபீட மாணவி புஸ்பமாலா தனது போராட்டத்தை நேற்று முதல் கைவிட்டார்.

குறிப்பிட்ட மாணவி நடத்தி வந்த போராட்டத்திற்கு தீர்வுகாணும் பொருட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை - யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாசிற்கும் மருத்துவ பீட மாணவி புஸ்பமாலாவிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் யாழ்பல்கலைக்கழக கலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கைதடி சித்தவைத்தியசாலை நிதியில் 60 லட்சம் ரூபா மோசடிசெய்யப்பட்டுள்ளது!

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

கைதடி சித்த ஆயுர்வேத வைத்திய சாலைக்கு கட்டடம் அமைப்பதற்கான நிதி முழுமையாக வழங்கப்பட்ட போதும் அந்தக் கட்டடம் சம்பந்தப்பட்டவர்களினால் கட்டி முடிக்கப்படவில்லை எனவும் இதன்மூலம் சுமார் 6 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டிருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிப்பகிர்வு தொடர்பான மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இரண்டாம் நாள் கூட்டம் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற போது - ஆயுர்வேத வைத்தியசாலை கட்டடப்பணிகள் ஸ்தம்பிதமடைந்து காணப்படுவது குறித்து கேள்வி எழுந்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டாலும் கைதடி சித்த வைத்தியசாலையின் கட்டடப்பணிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

## முகமாலை - புளியங்குளம்

# சோதனைச் சாவடிகள் திறக்கும் நேரத்தை நீடிக்க ஐ.சி.ஆர்.சி, படையினர் பின்னடிப்பு

யாழ் குடாநாட்டுக்கான போக்குவரத்து சேவையை இலகுபடுத்துவதற்காக முகமாலை - புளியங்குளம் சோதனைச் சாவடிகளூடான பயண நேரத்தை நீடிப்பதற்கு இராணுவத்தினருக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் இடையில் இழுபறி நிலை ஏற்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

முகமாலை - புளியங்குளம் சோதனைச் சாவடி மாலை 5.30 மணிக்கு மூடப்பட்டு வருவதால் குடாநாட்டுக்கான போக்குவரத்தில் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குறித்த நேரத்திற்கு சோதனைச் சாவடியை கடக்கமுடியாத அனேகமான மக்கள் தடைமுகாமில் நின்று மறுநாளே பயணத்தைத் தொடர வேண்டிய நிலை இருந்துவருகிறது.

இந்த வீதியூடாகப் போக்குவரத்து செய்வதற்கு வசதியாக சோதனைச் சாவடியை திறக்கும் நேரத்தை அதிகரிக்குமாறு பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வந்தபோதிலும் -

இரவு நேரங்களில் சோதனைச் சாவடியைத் திறப்பதற்கு மின்சார வசதி இல்லை என இருதரப்பினரும் தெரிவித்து வந்திருந்தனர்.

தற்போது இந்தச் சோதனைச் சாவடிகளுக்கு 24 மணிநேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு மாதக் கணக்காகியும் இன்னமும் சோதனைச சாவடி ஊடான போக்குவரத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சோதனைச் சாவடியைத் திறப்பதில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்ற போதிலும், இரு தரப்பினருக்கும் இடையில் உடன்பாடு எட்டப்படாமையால் தாமதம் ஏற்பட்டு வருவதாகப் படை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இதேவேளை, இரவு 7 மணிவரை சோதனைச் சாவடியை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சோதனைச்சாவடிகளூடான பயண நேரம் நீடிக்கப்படுமானால் - தூர இடங்களிலிருந்து வருகின்ற பிரயாணிகளின் சிரமங்கள் தவிர்க்கப்படுவதோடு பிரயாணங்களின்போது ஏற்படுகின்ற அசௌகரியங்களையும், வீண் நேரவிரயங்களையும் தவிர்க்க முடியும் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

## விளையாட்டுவிழா

(உரும்பிராய்)

உரும்பிராய் இளைஞர் சனசமூக நிலையமும், கல்வி வளர்ச்சிக் கழகமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா இன்று பி.ப 12.30 மணிக்கு தலைவர் இ.சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் வலி.கிழக்கு பிரதேசசெயலாளர் தெய்வேந்திரம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (82)



பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ஆ.விசாகலிங்கம் மாணவி ஒருவருக்குப் பரிசு வழங்குவதைக் காணலாம். (14)

# மீளக்குடியமர்ந்த மீனவருக்கு கடற்தொழில் உபகரணங்கள்

யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமரத் திரும்பியுள்ள கடற்தொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவுஸ்ரேலிய அரசினால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் குருநகர், பாஷையூர் ஆகிய பிரதேசங்களிலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகள், வள்ளங்கள், கண்ணாடி இழைப்படகுகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் கடற்றொழிலை அபிவிருத்திசெய்யும் நோக்கோடு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன். (17)

## முன்பள்ளி மாணவரின் விளையாட்டுப்போட்டி

(சுதுமலை)

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை 2.30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் சங்கத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கொத்தணி தலைவர் க.மெய்யழகன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (91)

## மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் டிப்ளோமாக் கற்கை நெறியைப் பூர்த்திசெய்து வெளியேறிய நான்கு அணி மாணவர்களுக்குமான கலந்துரையாடல் நாளை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

1,2,3,4 ஆம் அணி மாணவர்களின் தகைமை விபரங்கள் இறுதியாக ஆவணப் பட்டியலில் சேர்க்கப்படவுள்ளதுடன், மாகாண ஆளுநரைச் சந்திப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளதால், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நீர் உயிர் வள ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கே.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

## நயினாதீவில் இன்று இலவச மருத்துவமுகாம்

தீவக அரிமாக் கழகத்தினரும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்று நயினாதீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு, குருதியமுக்கம், பல் நோய்கள, குடற்புழு நோய், தோல் நோய், பார்வைக் குறைபாடு போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் செய்யப்படுவதுடன் சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன.

இதன்போது கண்ணாடி மற்றும் மருந்துகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதால், நயினை மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு தீவக அரிமாக் கழகம் கேட்டுக்கொள்கின்றது.

# கூட்டுறவு தின விழாவில் மாணவர்கள் கௌரவிப்பு!

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் 82 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை அண்மையில் இரு தினங்கள் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது. முதல் நாள் நிகழ்வு சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. சி.சிவசுப்பிரமணியம் - யாழ். (மா.சி.க.வ.கூ.ச.சமாசம்) இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இரண்டாம் நாள் நிகழ்வு சங்க உப தலைவர் ஆ.சண்முகம் தலைமையில் நடைபெற்றது. பெ.கனக சபாபதி (தலைவர், யா.மா.கூ.சபை) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைவர் சிவமகாராசாவும், கௌரவ விருந்தினர்களாக கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன், நெல்லியடி ம.ம. வித்தியாலய அதிபர் சேதுராசா, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 65 பேருக்கும், க.பொ.த.சாதாரண பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்ற 39 பேருக்கும். க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் உயர் புள்ளி பெற்ற 11 மாணவர்களுக்கும், கல்விசார் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுபெற்ற மாணவர்களுக்கும், மாவட்ட மட்ட கூட்டுறவு தினப் போட்டியில் பங்குபற்றி பரிசு பெற்றோருக்கும், சங்கநூலகத்தில் கிரமமாக நூல்களைப் பெற்று வாசிப்பவர்களுக்கும், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி பயிற்சியில் பங்குபற்றிச் சித்தியடைந்தவர்களுக்கும், வைப்பிற்கு எதிராக நுகர்ச்சிக்கடன் பெற்று ஒழுங்காகத் திரும்பச் செலுத்தியோருக்கும், சங்கக் கிராமிய வங்கியில் கடன் பெற்று தவணை தப்பாது கடன் மீளளித்தவர்களுக்கும் பரிசில்கள், ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டதுடன் பணியாளர்கள், மூத்த கூட்டுறவாளர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றது.

கலைநிகழ்வில் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசு பெற்ற தனிநடனம், பாடல்கள், பாலர் பாடசாலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. கலை நிகழ்வில் மாவட்டமட்ட கூட்டுறவு தினப் போட்டியில் பரிசு பெற்ற துன்னாலை சி.க.வ.கூ.சங்கத்தினரின் 'கூட்டுறவில் பலநோக்கு' என்ற நாடகமும் கல்வி வலயமட்டப் போட்டியில் பரிசு பெற்ற விக்கினேஸ்வராக் கல்லூரியின் 'அரிச்சந்திரா' நாடகமும் பார்வையாளர்கள் மத்தியில் பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்

### முகமதி கிறைண்டிங் மில்

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் பூடு, ஊறுகாய், மோர் மிளகாய், சீயாக்காய் பவுடர், பிளீச்சிங் பவுடர், ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் - முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ், இல.777, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

நாகம்ஸ் சுன்னாகம்




20 ஆம் திகதி வரை

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

திறைஞ்சன்ஸ் சங்கானை



கமல், சினேகா, பிரபு நடித்த வசூல்ராஜா MBBS

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Return to two moon junction

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த இன்று மட்டும் மதுர

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)

நாளை முதல் அர்ஜுன் நடித்த அரசாட்சி



(சி-2725)

## 19 வருடகால தனித்துவமான பயிற்சி நிலையம்

## கலாலயா பயிற்சியகம்

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) யாழ்ப்பாணம்

### மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்

- கேக் ஐஸிங் - சகலவிதமான ஐஸிங் 22 வகையான கேக் அமைப்புக்கள், மாச்சீனி மலர்கள் ( Sugar Crafting) என்பன வெகு சிக்கனமான முறையில் செய்தல்.
- கூந்தல் அலங்காரம் - 20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் ( Hair Styles) போடுதல்.
- FABRIC PAINTING - SAREE PAINTING, கைக்குட்டை, தலையணை உறைகளில் வர்ணந்தீட்டல், EMBOSS PAINTING, POT PAINTING, மண் PAINTING.
- உணவுகள் தயாரித்தல் - மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் சீன உணவுகள் தயாரித்தல்.
- கைவேலை - கடதாசி அலங்காரம், கழிவுத்துணி வேலை, கிறிஸ்ரல் வேலை, முத்துமாலை கோர்த்தல், றிபன் வேலை.

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

இத்துடன் அடிப்படை FACIAL அழகுக்கலையும், மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் விதமும், 2 நாள் பயிற்சி வகுப்புக்களாக நடைபெறும்.

### 6 மாதகால தையல் பயிற்சி, பூவேலை வகுப்புகள்

தையல் பயிற்சி - குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்

பூவேலை - கடதாசியினாலும், துணிகளினாலும் 20 வகையான மலர்கள் மற்றும் BOUQUET செய்தல்.

சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 25.09.2004

கிழமைநாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 27.09.2004

மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 2.00 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

(சி-3158)

- பதிவாளர் -


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 17 - 04 - 1953



மறைவு 18 - 09 - 2004

### திருமதி திலகவதி குமரவேல்

சுன்னாகம் பல நோ.கூ.சங்கத்தின் பொதுமுகாமையாளரும், சங்கத் தலைவர் திரு சி.குமரவேல் அவர்களின் பாசமிகு மனைவியுமாகிய திருமதி திலகவதி குமரவேல் அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும், வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள் - பணியாளர்கள்
சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்

(சி -3161)

# புலனாய்வுப் பிரிவுகள் அனைத்தையும் ஓரணியின்கீழ் செயற்படுத்துவதற்கு முடிவு

(கொழும்பு)

படைத் தரப்பின் புலனாய்வுப் பிரிவை மீளக்கட்டியெழுப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதன் முதற்கட்டமாக இராணுவ புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு என்பன ஒருங்கிணைந்த அமைப்பின்கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

இதனடிப்படையில் இராணுவ புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரணவின்கீழ் அனைத்துப் புலனாய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

கூட்டுப் படைகளின் அதிகாரியாகப் பதவியேற்றுள்ள வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் ஆலோசனையின் பேரிலேயே இந்த மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது. நாளை கொழும்பில் நடைபெறவுள்ள புலனாய்வு அதிகாரிகளின் உயர்மட்ட மாநாட்டின்போது இந்தப் புதிய நடைமுறை குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகப் படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஊடுருவிப் பல வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்ட புலனாய்வுப் பிரிவின் முக்கியமான அணியான ஆழ ஊடுருவி தாக்கும் அணி தற்போது முற்றாகச் செயலிழந்துள்ளது.

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் மிக இரகசியமான முறையில் இயங்கிவந்த இந்தப் பிரிவை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற பொலிஸ் சுற்றிவளைப்பு வெளியுலகத்திற்கு அம்பலப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு புதிய அரசாங்கம் பதவி ஏற்றபின விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்ட குழப்பங்களை பயன்படுத்தி விடுதலைப் புலிகளை பலவீனமடையச் செய்வதில் புலனாய்வுப் பிரிவு தீவிர பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களின் பின்னணியில் புலனாய்வு பிரிவு தொடர்புபட்டிருந்ததாக விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியிருந்தனர். கருணா அணிமீது கிழக்கில் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட கருணா அணியினருக்கு அனைத்து உதவிகளையும் வழங்கியதாக சந்தேகிக்கப்படும் இந்த சிறப்பு அணியின் செயற்பாடுகள், கொழும்பில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ் குழுக்களில் இருந்து விலகி உதிரிகளாகச் செயற்பட்டவர்களை பெருமளவு உள்வாங்கி அவர்



களின் முழுமையான பங்களிப்போடு செயற்பட்ட ஆழ ஊடுருவித் தாக்கும் அணியின் முக்கியஸ்தர்களான புளொட் மோகன், ரமேஷ் போன்றவர்களும் மேலும் பல இரகசிய செயற்பாட்டாளர்களும் கொலைசெய்யப்பட்டதை அடுத்து இந்த அமைப்பில் இருந்து பலர் பாதுகாப்புகருதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த நிலையில் பாதுகாப்புத் தரப்பின் புலனாய்வுப் பிரிவை மறுசீரமைக்கவேண்டிய நிலை தற்போது உருவாகியுள்ளது.

இதுவரை இராணுவப் புலனாய்வு பிரிவு மற்றும் பொலிஸ் புலனாய்வு பிரிவு ஆகிய இரு அமைப்புக்களாகத் தனித்து செயற்பட்ட புலனாய்வாளர்களை ஒன்றிணைப்பதன் மூலம் தரமான புலனாய்வுப் பிரிவை உருவாக்கமுடியும் என படைத்தரப்பு கருதுவதாகவும் இதன் அடிப்படையிலேயே புதிய மாற்றங்கள் ஏற்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே) (01)

# தலைமறைவான கைப்பந்தாட்டக் குழு ஜேர்மனியில் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

இலங்கையிலிருந்து ஜேர்மன் சென்ற போலி கைப்பந்தாட்டக் குழுவைச் சேர்ந்த 23 பேரும் நேற்று முன்தினம் மாலை ஜேர்மன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் ஜேர்மனியில் நடைபெற்ற கைப்பந்தாட்ட போட்டியொன்றில் கலந்துகொள்ள விண்ணப்பித்து அதற்கான விசாவைப் பெற்று இந்த அணியினர் சென்றிருந்த போதிலும் போட்டியில் கலந்து கொள்ளாமல் தலைமறைவாகியிருந்தார்கள்.

இவர்கள் திட்டமிட்டு இத்தாலிக்குச் செல்லும் நோக்கத்துடனேயே இந்தப் பயணத்தை மேற்கொண்டதாகப் பின்னர் தெரியவந்துள்ளது. ஒரு வாரகாலமாக ஜேர்மனியில் தலைமறைவாகியிருந்த இவர்கள் நேற்று முன்தினம்மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக 33 பேர் லண்டனுக்குச் சட்டவிரோதமாகச் செல்வதற்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஏயர் லங்கா அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறிப்பிட்ட சட்டவிரோதப் பயணிகளுடன் இவரும் தற்போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# உல்லாசப்பயணிகள் வருகை ஜூலையில் திடீர் அதிகரிப்பு

இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஜூலை மாதம் அதிகரித்துள்ளதாக இலங்கை உல்லாசப்பயணத்துறை தெரிவித்துள்ளது.

இதன்படி கடந்த யூலை மாதம் மட்டும் 50 ஆயிரத்து 525 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிகரிப்புக்குக் காரணம் ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி கொழும்பில் நடந்ததும், மற்றும் எசல பெரஹரா இடம்பெற்றதுமே என உல்லாச பயணச்சபை தெரிவித்துள்ளது.

உல்லாசப்பயணிகளில் கூடுதலானவர்கள் இந்தியர்கள் எனவும், இதற்கு இந்திய அணியின் ரசிகர்கள் பெருமளவில் இங்கு வந்ததே காரணம் எனவும் கடந்த 2003 ஆம் ஆண்டு ஜூலைமாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் ஜூலை மாதம் வந்த இந்திய உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஐம்பது வீதத்தால் அதிகரித்துள்ளதெனவும் உல்லாசப்பயணச்சபை தெரிவித்துள்ளது.

இதனைவிட மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வந்த உல்லாசப் பயணிகளின் தொகையும் அதிகரித்துள்ளது. குறிப்பாக கிழக்கு ஐரோப்பா மற்றும் ரஷ்யாவிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை 114 வீதமாகும்.

இலங்கையின் பாரம்பரிய சந்தைகளில் கலந்து கொள்வதற்காக லண்டன், ஜேர்மனி,பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து நாடுகளிலிருந்து வரும் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தாயகத்திற்குத் திரும்ப முற்பட்ட அகதிகள் தமிழகத்தில் கைது!



சட்டவிரோதமாக இலங்கைக்குச் செல்ல முயன்ற 7 சிறுவர்கள்,7 பெண்கள் உட்பட 20 அகதிகளை இந்தியப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இராமேஸ்வரத்திலிருந்து கடத்தல், படகுமூலம் சட்டத்திற்குப் புறமபாக அகதிகள் இலங்கைக்குச் செல்வது தொடர்கிறது. கடந்த திங்கட்கிழமையன்று இராமேஸ்வரத்திலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற 2 படகுகளையும், படகில் இருந்த மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைதுசெய்தனர். இவர்களில் இந்திய மீனவர்கள் 4 பேரை இலங்கைப் பொலிஸார் கைது செய்து மன்னார் சிறையில் தடுத்து வைத்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் 20 அகதிகளை ஏற்றிவந்த வாகனத்தைப் பாம்பன் சோதனைப் பிரிவுப் பொலிஸார் பிடிததனர். விசாரணையின்போது இராமேஸ்வரம் வழியாக இலங்கை செல்வதற்காக கோவில்பட்டி, கன்னியாகுமரி அகதிகள் முகாமிலிருந்து வந்ததாக பிடிபட்ட அகதிகள் தெரிவித்தனர்.

பிடிபட்ட 20 அகதிகளும் பாம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் விசாரணையின்போது அகதிமுகாமிலிருந்து 4 நாட்களுக்கு முன்பு புறப்பட்டுவந்து 3 நாட்களாகப் பாத்திபனூரில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தோம். இலங்கைக்கு ஆள் அனுப்பும முகவர் குப்புராம் என்பரிடம் தலா 2 ஆயிரம் ரூபா கொடுத்து இலங்கைக்குச் செலவதறகாக வாகனத்தில் வந்தோம். என்று தெரிவித்தனர்.

விசாரணையை தொடர்ந்து கைதான திருகோணமலைச் சேர்ந்த சந்திரகுமார் (38), ஜீவமலர் (45), சந்திரா (30), சபேசன் (29), வவுனியாவைச் சேர்ந்த உதயகுமார் (27), வனிதா (22) உட்பட 20 அகதிகளையும் பொலிஸார் கைதுசெய்தனர் அகதிகளை ஏற்றிவந்த வாகனத்தைப் பறிமுதல் செய்த பொலிஸார் அதன் சாரதியையும் கைதுசெய்தனர்.

## கடற்பாதுகாப்புக்கென இந்தியாவிடமிருந்து கப்பல்

இலங்கைக் கடற்படை, இந்தியாவிடமிருந்து 20 கோடி ருபாவுக்கும் அதிக பெறுமதியான கடற்பாதுகாப்புக் கப்பலொன்றைக் கொள்வனவு செய்யவுள்ளது.

மணித்தியாலத்திற்கு 21 கடல் மைல வேகத்தில் பயணிக்கக் கூடிய இந்தக் கப்பலில் 80 படையினரை ஏற்றிச்செல்லலாம். இந்திய கடனுதவித் திட்டத்தின்கீழ் இந்தக் கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை கடற்படை 2000 ஆம் ஆண்டில் இந்திய கடற்படையிடமிருந்து 'சயுர' கப்பலை விலைக்குப் பெற்றது.

போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் மட்டும் கடற்புலிகள் சுமார் 35 படகுகளைக் கொள்வனவு செய்து தமது பலத்தை அதிகரித்தமையால், கிழக்குப் பிராந்திய கடற்பரப்புகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகக் கடற்படையினரால் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# சட்டவிரோத ஆயுதங்களை அரசு கொள்வனவு செய்யும்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்



சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டு, நாட்டில் குற்றச்செயல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுவரும் சுமார் 35 ஆயிரம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யப்போவதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

களுத்துறையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

சட்டவிரோதமான முறையில் நாட்டிலுள்ள ஆயுதங்களைப் பறிமுதல் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். எனவே இந்த ஆயுதக் களைவைப் பலாத்காரமாக மேற்கொள்ளாமல் ஆரம்பத்தில் அவற்றைக் குறிப்பிட்ட விலைக்குக் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்தார்.

படைகளிலிருந்து தப்பியோடிய சுமார் ஐம்பதாயிரம் படையினரிடமே அதிகமான சட்டவிரோத ஆயுதங்கள் பாவனையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# எரிபொருள் விலை உயர்வை எவராலும் தடுக்கமுடியாது!

## நிதியமைச்சின் செயலாளர் கூறுகிறார்

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்தாலும் சரி, அதிகரிக்காவிட்டாலும் சரி இலங்கையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பதைத் தடுக்கமுடியாது என நிதியமைச்சின் செயலாளர் டி.பி. ஜெயசுந்தர தெரிவித்தார்.

தற்சமயம் டீசல் ஒரு லீற்றரை விநியோகிக்கும்போது அதில் அரசாங்கத்துக்கு 4 ரூபாவரை நட்டம் ஏற்படுகிறது. மண்ணெண்ணை ஒரு லீற்றர் விநியோகத்துக்கு 7 ரூபா நட்டம் ஏற்படுகின்றது. எனவே, இதனைச் சமாளிக்கும்வகையில் எரிபொருளின் விலையை உயர்த்துவது அவசியம்.

எனினும் விரைவில் எரிபொருட்களின் விலையில் உயர்வை ஏற்படுதத முடிவு எடுக்கப்படவில்லை. எரிபொருள் விநியோகத்தில் இந்திய நிறுவனங்களின் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்.

ஈரான் தற்சமயம் இலங்கைக்கு எரிபொருட்களை மானிய அடிப்படையில் வழங்கிவருகின்றது. அது நிறைவுபெற்றதும் ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களுக்கு முழுப் பணத்தையும் இலங்கை செலுத்தவேண்டியேற்படும்.

இந்த நிலையில் குறிப்பிட்ட மானியத்தை சவூதி அரேபியாவிடம் இருந்து தாம் எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் ஒபெக் நாடுகளுக்கு விஜயம்செய்துவிட்டு திரும்பிய பின்னரே இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

# சபாநாயகரை நீக்குவதற்கு ஆதரவு வழங்கமாட்டோம்!

## முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் லொக்கு பண்டாரவுக்கு எதிராக அரசாங்கத்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எந்தவிதத்திலேனும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கமாட்டாதென மக்கள் அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராகவும் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் தமது கட்சி அதற்கும் ஆதரவு வழங்கமாட்டாது.

தமது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 பேரினதும் வாக்குகளால் தெரிவான சபாநாயகர் லொக்கு பண்டாரவை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கு எந்த விதத்திலேனும் அதரவு வழங்குவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பாகிஸ்தான் இராணுவத்தினர் தீவிரவாதிகள் மீது தாக்குதல்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மலைவாசி மக்கள் வசிக்கும் மலைப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருந்த இடங்களை நோக்கி பாகிஸ்தான் இராணுவம் ஏவுகணை வீசித் தாக்குதல் நடத்தியது. பதிலுக்குத் தீவிரவாதிகள் இராணுவ முகாம்களை நோக்கி, றொக்கெட்டுகளை வீசித் தாக்கினர். ஆனால், அவை முகாம்கள் அருகே விழுந்ததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை..

இராணுவம் நடத்திய தாக்குதலில் உயிர் சேதம் ஏற்பட்டதா? எத்தனை பேர் இறந்தனர் என்பன போன்ற விபரங்கள் கிடைக்கவில்லை. கடந்த மார்ச் மாதம் முதல் 150 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவம் கூறியுள்ளது.

கடந்த வாரம் மட்டும் 50 தீவிரவாதிகள் - பெரும்பாலும் வெளிநாட்டினர் பாகிஸ்தானில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக் போர் சட்டவிரோதமானது என்ற கொபி அனானின் கருத்தை அமெரிக்கா நிராகரித்தது!

ஈராக் போர் சட்டவிரோதமானது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் கூறி இருப்பதற்கு அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின்பவல் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொலின்பவல் தெரிவித்துள்ளதாவது -

"யாருக்கும் உதவாத பிரகடனத்தை இப்போது ஏன் அவர் வெளியிடுகிறார். ஈராக்கியர்களுக்கு உதவ வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கும்போது இதுபோன்ற திசை திருப்பும் வேலைகளில் கவனம் செலுத்த மாட்டோம்''

"சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டுத்தான் நாங்கள் செயற்பட்டோம்'' என்றும் பவல் கூறினார்.

ஆயினும் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, போலந்து ஆகிய நாடுகளும், ஈராக்கில் இராணுவ நடவடிக்கை சட்டப்படி சரியானது தான் என்று அறிவித்துள்ளன.




# அமெரிக்காவின் புதிய நாணயம்!

அமெரிக்காவில் நாணய கட்டுப்பாடு அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு தொடக்கத்தில் 5 சென்ட் நாணயங்களை அச்சிட்டு வெளியிட இருக்கிறது. இந்தப் புதிய 5 சென்ட் நாயணத்தில் ஒரு பக்கத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி மறைந்த தோமஸ் ஜெபர்சன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு பக்கத்தில் காட்டெருமை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நிக்கல் உலோகத்தால் இந்தப் புதிய நாணயம் அச்சிடப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு முதல் இது புழக்கத்தில் வர இருக்கிறது.

# ஈராக்கின் வடபகுதி கிர்குக் நகரத்தில் கார்க்குண்டு தற்கொலைத் தாக்குதல்

ஈராக்கின் வடபகுதி நகரான கிர்குக்கில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் 23பேர் கொல்லப்பட்டதுடன் இருபது பேருக்கு மேல் படுகாயமடைந்தனர்.

கிர்குக் நகரிலுள்ள பொலிஸ் நிலையமொன்றில் இடம்பெற்ற ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போதே இந்த கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் 15 தொடக்கம் 20 பேர் வரை காயமடைந்திருக்கலாமென ஈராக்கிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட வியாபாரியான அசு அகமட் கருத்து வெளியிடுகையில் -

பொலிஸாரின் ஆட்சேர்ப்பு மையத்தை நோக்கி வேகமாக காரொன்று செல்வ தனைக்கண்டேன். அதன் பின் பெரியதொரு வெடிச்சத்தமொன்று கேட்டது. பின், மிகப் பெரியளவில் தீச்சுவாலைகள் எரியத் தொடங்கியது என தெரிவித்தார்.

இந்த வெடிகுண்டுச் சம்பவத்தின் பின்னர் காயமடைந்தவர்கள் அனைவரையும் அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பி உதவி செய்தேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்க விமானப் படையினர் பலூஜா நகரில் நடத்திய தாக்குதலில் ஆறு பொதுமக்கள் கொல்லப்பட்டதாக பலூஜா நகர வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் பலூஜா நகாிலுள்ள இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள், அல்லது அந்தக் கிளர்ச்சிவாதிகளுக்கு உதவிபுரிய வந்த வெளிநாட்டு ஆயுதபாணிகள் மீதே நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஆனால், இந்தத் தாக் குதலில் கொல்லப்பட்ட அனைவரும் பொது மக்களென உள்ளூர் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஈராக்கிலுள்ள ஓயில் கம்பனியொன்றின் மேற்பார்வையாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் உயிர் தப்பியதுடன், அவரது மெய்ப்பாதுகாவலர்கள் ஐவர் கொல்லப்பட்டனர்.

மொகமட் சிப்ரி என்ற இந்த மேற்பார்வையாளர் ஈராக்கின் வடபகுதியில் தொடரணி ஒன்றில் பயணம் மேற்கொண்டிருந்தவேளை றொக்கட் தாக்குதலுடன் கூடிய துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



பாக்தாத்தில் இடம்பெற்ற வீதியோர குண்டுவெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பகுபாநகரில் உள்ள பாடசாலையொன்றுக்கு முன்னால் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்துக் காத்திருந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர் நின்ற கூட்டம் மீது நடத்தப்பட்ட மோட்டார் எறிகணைத் தாக்குதலில் ஒன்பது பேர் காயமடைந்ததாக பொலிஸ், மற்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

# ஆப்கான் தேர்தல் பாதுகாப்பிற்கு கூடுதலான இராணுவத்தை அமெரிக்கா அனுப்புகின்றது



(வொஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் அடுத்த மாதம் 9ஆம் திகதி தேர்தல் நடக்க இருக்கிறது. தேர்தலின்போது பலத்த பாதுகாப்பு அளிப்பதற்காக கூடுதலாக 700 துருப்புக்களை அமெரிக்கா அனுப்புகிறது. கூடுதல் துருப்புகளையும் சேர்த்தால், ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க துருப்புக்களின் பலம் 19 ஆயிரம் ஆகும்.

வடக்கு கரோலினாவில் உள்ள போர்ட் பிராக் என்ற இடத்திலிருந்து கூடுதல் இராணுவம் எப்போது ஆப்கான் செல்லும் என்றும் தெரியவில்லை.

இதற்கிடையில் ஜனாதிபதி கர்சாய்- காபூலுக்கு வெளியே கார்டெஸ் நகரில் நடந்த பேரணியில் கலந்துகொள்வதற்காக ஹெலிகொப்டரில் சென்றார். அப்போது தீவிரவாதிகள் வீசிய ரொக்கட், ஹெலிகொப்டருக்கு அருகே விழுந்து வெடித்தது.

இதனால், கர்சாயை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தலை ஒரு மாதம் தள்ளி வைக்கவேண்டும் என்று கோரியுள்ளனர்.

# ஈராக்கில் கடத்தப்பட்ட அமெரிக்கர்களை கொல்லப்போவதாக ஈராக் கிளர்ச்சிவாதிகள் எச்சரிக்கை!

ஈராக்கில் கடத்தப்பட்ட வெளிநாட்டவர்களை கொலை செய்யப்போவதாக ஈராக்கியத் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்கப் படைகள் கைது செய்து தடுத்து வைத்துள்ள பெண் தீவிரவாதிகளை 48 மணித்தியாலங்களுக்குள் விடுதலை செய்யாவிட்டால் கடந்த வியாழக்கிழமை பாக்தாத்தில் வைத்து கடத்தப்பட்ட இரு அமெரிக்கர் மற்றும் பிரித்தானியர் உட்பட மூன்று வெளிநாட்டவர்களையும் கொலை செய்யப் போவதாக அபு முசாப் அல்சர்காவியின் தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

முகமூடி அணிந்த ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளுக்கு முன்னே கண்கள் கட்டப்பட்ட நிலையில் கடத்திச் செல்லப்பட்ட வெளிநாட்டவர்கள் மூவரும் அமர்ந்திருப்பதை அல் ஜசீரா தொலைக்காட்சி நேற்றுக் காண்பித்தது.

இதேவேளை, கடத்திச் செல்லப்பட்டவர்களை பாதுகாப்பாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கடத்திச் செல்லப்பட்ட வெளிநாட்டவர்களது குடும்பத்தினர்கள் அமெரிக்க மற்றும் பிரிட்டன் நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இந்தவிடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க அதிகாரிகள் இவர்களது விடுதலை தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

# எரிபொருள் விநியோகக் குழாய் வெடித்து நைஜீரிய நகரொன்றில் முப்பது பேர் பலி!




நைஜீரிய வர்த்தகத் தலைநகர் லாகோசில் எரிபொருள் விநியோகக் குழாய் வெடித்ததில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

எரிபொருள் விநியோகக் குழாயில் இருந்து சட்டவிரோதமாக எரிபொருளினை பொதுமக்கள் திருடிய வேளையிலேயே, இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று- எரிபொருள் விநியோகக் குழாய் வெடித்ததில் ஏற்பட்ட தீ பற்றியெரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தில் இறந்தவர்களுடைய கருகிய உடல்கள் நீரிலே மிதந்து வருவதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பி.பி.ஸியின் செய்தியாளர் நைஜீரியாவில் பொது மக்கள் சட்டவிரோதமாக எரிபொருள்களை களவாடுவதும் அவ்வப்போது தீ விபத்துக்கள் ஏற்படுவதும் வழமை என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தினால், லாகோஸ நகரம் வழமைக்கு மாறாக செயலிழந்து இருப்பதாகவும், சம்பவத்துடன் தொடர்புடையவர்களை பொலிஸார் கைது செய்வார்கள் என்கின்ற அச்சத்தில் பொது மக்கள் காணப்படுவதாகவும் செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஆனாலும் இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

# மைக்கல் ஜாக்சன் நீதிமன்றில் ஆஜர்!

(வொஷிங்ரன்)

அமெரிக்காவின் பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சன் 14 வயது சிறுவனுடன் பாலியல் உறவு கொண்டதாகவும் அவனுக்கு போதை மருந்து கொடுத்ததாகவும் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை சாந்தா மரியா நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

நேற்று மைக்கல் ஜாக்சன் நீதிமன்றில் ஆஜரானார். நேற்றைய விசாரணையில் சிறுவனின் தாயார் ஜேன்டோ சாட்சியமளித்தார். மைக்கல் ஜாக்சன் தங்கி இருந்த வீட்டுக்கு தனது மகன் அடிக்கடி சென்று வந்ததாக அவர் அப்போது தெரிவித்தார். இந்த வழக்கில் மைக்கல் ஜாக்சன் மீது 10 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

# இங்கிலாந்து நாடாளுமன்றுக்குள் வெடி குண்டு சாதனங்களை கடத்திச் சென்ற பத்திரிகை நிருபர்

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எந்த அளவுக்குப் பலவீனமாக இருக்கின்றன, என்பதை வெளி உலகத்துக்கு எடுத்துக்காட்ட ஒருநிருபர் விரும்பினார்.

'சன்' பத்திரிகையின் நிருபரான அந்தோனி பிரான்ஸ், நாடாளுமன்றத்தில் உணவுச்சாலையில் உணவு பரிமாறுபவராக வேலைக்குச் சேர்ந்தவர். 3 வாரம் அங்கு வேலை பார்த்தார். அவர் துணைப்பிரதமர் ஜோன் பிரஸ்காட்டுக்கு தேநீர் கொடுத்து பரிமாறும் காட்சியை அந்தப்பத்திரிகை போட்டோ எடுத்து பிரசுரித்தது.

அவர் அந்தக் கடையில் வேலை பார்த்த நேரத்தில், வெடிகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான மின்சாரக் கம்பி, டைமர், பற்றிகள் போன்றவற்றை நாடாளுமன்றத்துக்குள் கடத்தினார்.

"நான் ஒரு தீவிரவாதியாக இருந்தால், வெடிகுண்டை கழிவறையிலோ, நான் வேலை செய்த உணவுச்சாலையிலோ வைத்து நாடாளுமன்றத்தையே தகர்த்து இருக்க முடியும்" என்று நிருபர் அந்தோனி பிரான்ஸ் கூறினார்.




பாதுகாப்பு குறைபாட்டை நிருபர் சுட்டிக்காட்டிய பிறகு, நாடாளுமன்ற பாதுகாப்புக்கு என்று தனி ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும், என்று நாடாளுமன்றத் தலைவர் பீட்டர் ஹெய்ன் கோரி இருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் குண்டு வெடித்தால் அமைச்சர்கள் உயிருக்கு மட்டும் அல்லாமல் அங்கு பணியாற்றும் 14 ஆயிரம் பேருக்கும் ஆபத்து ஏற்படும், என்றும் அவர் கூறினார்.

# சனசமூக நிலையங்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி பிரேரணை கையளிப்பு

சனசமூக நிலையங்களுக்கான உதவிக் கொடுப்பனவுகளை அதிகரிக்கக்கோரும் பிரேரணையொன்று, வலி - வடக்கு பிரதேசசபை செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அளவெட்டி மாகாஜனசபை சனசமூக நிலையமே இந்த பிரேரணையை சமர்ப்பித்துள்ளது.

இதில், தற்போது உள்ளூராட்சித் திணைக்களத்தால் சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் உதவு தொகையானது - வருடாந்தம் ஒரு தினசரிப் பத்திரிகையாவது வாங்கிப் போடுவதற்குப் போதாமலுள்ளது.

தற்போது குடாநாட்டில் நான்கு தினசரிகள் வெளிவருவதுடன், வெளியிடங்களில் இருந்தும் பல்வேறு பயனுள்ள பத்திரிகைகள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

எனவே, சனசமூக நிலைய வாசகர்களின் நன்மை கருதி, தற்போது சனசமூக நிலையங்களுக்கு வருடம்தோறும் வழங்கப்படும் உதவுத் தொகையை, சனசமூக நிலையங்களின் தரத்திற்கு ஏற்ப அதிகரிக்க வேண்டும்.

இதன் படி ஏ தரத்திலானவைக்கு வருடம் 5 ஆயிரம் ரூபாவும், பி தரத்திலானவைக்கு வருடம் 3 ஆயிரம் ரூபாவும், சி தரத்திலானவைக்கு வருடம் 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சனசமூக நிலையங்களுக்கு வருடாந்தம் 1500 ரூபாவிலும் குறைந்த தொகையே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இதனைப் பெற்றுக்கொள்வதிலும் சில சனசமூக நிலையங்கள் அக்கறையின்றி உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(94)

# தியாகி திலீபனின் 17ம் ஆண்டு நினைவு நாள் போட்டிகள்

தமிழீழ கல்விக்கழகத்தால் முன்னர் அறிவிக்கப்பட்டபடி, பாடசாலை மாணவர்களிடையே நடாத்துவதாக அறிவிக்கப்பட்ட கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான போட்டிகளில் - முறையே கட்டுரை, கவிதைப் போட்டிகள் கல்வி வலயங்கள் அறிவித்த திகதிகளில், குறித்த வலயங்களில், அறிவிக்கப்பட்ட பாடசாலைகளில் நடைபெறும்.

அதேவேளை, மேற்பிரிவு மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிகள் - யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலும் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, குறித்த வலயங்கள் தெரிவுசெய்து அறிவிக்கும் பாடசாலைகளிலும் நடைபெறும்.

சகல போட்டிகளிலும் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் தியாகி திலீபனின் இறுதிநாள் நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

வலய மட்டத்தில் நிகழ்வு நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். மாவட்ட தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் க.ஆர்வலன் அறிவித்துள்ளார்.

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சொற்பொழிவு

(புலோலி)

புலோலி வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்துள்ள பெரியாழவார் ஆச்சிரமத்தில், பிரதி ஞாயிறுக்கிழமை தோறும் இடம்பெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்ச்சி தொடரில் -இன்று ஞாயிற்றுக்கிழமை "வைஷ்ணவ பக்தி நெறியில் நம்மாழ்வார்" என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக மாணவன் வை. பிரதீபன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(14,20)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : வி.டார்ஜினி
முகவரி : 2ம் வட்டாரம் நெடுந்தீவு.

### மூன்றாவது அகவையில்



பெயர் : கு.நிருஜா
முகவரி : சரஸ்வதி வாசம், வதிரி.

### எட்டாவது அகவையில்



பெயர் : உ.நித்தியா
முகவரி : மீசாலை வடக்கு, கொடிகாமம்.

### வாழ்க வளமுடன்




# முதியோர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

(பருத்தித்துறை)

சர்வதேச சிறுவர் தினத்தை முனனிட்டு, யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் கவிதை, கட்டுரைப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

தரம் 6-8 முதலாம் பிரிவு, தரம் 9-11 இரண்டாம் பிரிவு, தரம் 12-13 மூன்றாம் பிரிவு ஆகிய பிரிவுகளில் பாடசாலையில் போட்டிகளை நடாத்தி- முதலாம், இரண்டாம் மாணவர்களது ஆக்கங்களையும், அவர்களது விபரங்களையும் இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கும்படி யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா கேட்டுள்ளார்.

சிறுவர்தின கவிதை, கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு - பிள்ளைகளுக்கான சிநேகபூர்வ சமூகத்தை கட்டி எழுப்பல், முதியோர்தின கவிதை கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு - 'முதியோரைப் பேணுவோம்' எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வல்லிபுர ஆழ்வார் கோயில் உற்சவ காலப் பணிமனை

(புலோலி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான மஹோற்சவ காலத்தில், பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் உற்சவகால பணிமனை ஒன்று இயங்கிவருகிறது.

உற்சவகாலத்தில் உள்ள உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இப்பணிமனை இயங்கி வருகிறது.

உற்சவ காலமான 17 தினங்களும் இப்பணிமனை இயங்குமென பருத்திததுறை செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் மக்கள் பெரும் நன்மை அடைவார்கள். உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமென அவர் மேலும் தெரிவித்தார். (14)

# கணினிக் கல்வியறிவு எல்லோருக்கும் அவசியமானதொன்றாக இருக்கின்றது

## வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

கணினி இன்று மனிதர்களின் தேவையாக மாறிவிட்டது. உலகமயமாக்கலுக்கு ஏற்ப எம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்துக்கு, பழைய மாணவர்களின் அனுசரணையுடன் பிரான்ஸ் கிரீடரல் நகரிலுள்ள 'தென்றல் தமிழ் மாணவர் அமைப்பு' அன்பளிப்புச் செய்த 10 கணினிகள் கையளிப்பு வைபவத்தில் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவிததார்.

வித்தியாலய அதிபர் சு.கா.அரியகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அவர் தொடரந்து உரையாற்றுகையில் - உயர்தர வகுப்பில் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் கணினி அறிவு இல்லாமல் எவரும் இருக்கமுடியாது.

மாணவர்கள் இவ்வறிவைப் பெறுவதற்கு, பழைய மாணவர்கள் கணினிகளைப் புதிதாகக் கொள்வனவு செய்து, வழங்க முன்வந்தமை பாராட்டப்படவேண்டும்.

இந்த முயற்சிக்காக முன்நின்று உழைத்த இந்தப் பாடசாலையின் பழைய மாணவன் செல்லையாவுக்கு உடுத்துறை மகாவித்தியாலய கல்விச் சமூகம் கடமைப்பட்டவர்களாவர் என்றார்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆ.ரி.ஜெயசீலன், கடற்புலிகளின் தளபதி மங்களேஸ், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.நந்தகுமார், ஏ.அருளானந்தம் ஆகியோர் உரையாற்றினர்.

(17)

# ஹாட்லிக் கல்லூரிக்கு பொருட்கள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு கல்லூரியின் பழைய மாணவன் எஸ்.தங்கவேல் ஒருலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

ஒரு பக்ஸ் இயந்திரம், 4 மின் விசிறிகள், இரு அலுமாரிகள், இரு பௌதீக ஆய்வுகூட மேசைகள் என்பவற்றையே ஹாட்லிக் கல்லூரிக்கு அவர் அன்பளிப்பாக வழங்கினார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் கலந்து கொண்டார். இந்தப் பொருட்களை எஸ்.தங்கவேல் கல்லூரி அதிபரிடம் கையளித்தார்.

(14)



யாழ். மாவட்ட தாச்சி சங்கம் நடாத்திய தாச்சிச் சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெறுவதைப் படத்தில் காணலாம். (91)



பிரம்மஸ்ரீ க.மங்களேஸ்வரக்குருக்கள் ஞாபகார்த்தமாக நியாந்தியினால் வெளியிடப்பட்ட அபரக்கிரியைகள் சில விளக்கங்கள் எனும் நூலின் சிறப்புப் பிரதியை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரிடமிருந்து இந்துமத குருமார் ஒன்றியத்தலைவர் ப.மனோகரக்குருக்கள் பெறுகிறார்.

(101)



அண்மையில் இடம்பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாடிக் கட்டடத் திறப்பு விழாவில் மேலதிக மாகாண கல்விப் பணிமனை பொறியியலாளர் ஜி.சிவபாலன் குத்துவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (14)




மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் - நூற்றாண்டு மலரின் முதற் பிரதியை வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவத்திடமிருந்து மனோகரதாசன் பெறுவதைப் படத்தில் காணலாம். (91)

# விளையாட்டு அரங்கம்



# வில்லங்கமான விருது

"பட்ட காலிலே படும்" என்பார்கள். அதற்கு மிகச்சிறந்த உதாரணமாகியுள்ளார் இலங்கையின் நட்சத்திரப் பந்து வீச்சாளர் முரளிதரன்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், தற்போது தொலைக்காட்சி வர்ணனையாளராக விளங்கிவருபவருமான ரிச்சி பேனோ அண்மையில் சென்ற நூற்றாண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் பதினொரு பேரின் பெயரை வெளியிட்டிருந்தார். அதில் சுழற்பந்து வீச்சாளராக அவுஸ்ரேலியாவின் ஷேன் வோணின் பெயரே இடம் பெற்றிருந்தது. முரளிதரனின் பெயர் இல்லை.

அவ்வாறே இந்த மாதத் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்ட ICC உலக டெஸ்ட் அணித்தெரிவிலும் நிகழ்ந்தது. இது இலங்கை ரசிகர்களுக்கு வருத்தத்தை உண்டு பண்ணியிருக்கும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.



ஷேன்வோண்
இந்த வீருது போதுமா?

இதில் ரிச்சி பேனோவால் அறிவிக்கப்பட்ட அணியில் முரளிதரனின் பெயர் இடம்பெறாதிருந்தமை வியப்புக்குரிய தொன்றல்ல. ஏனென்றால் அவுஸ்ரேலியாவின் முதல் குடிமகன் பிரதமர் ஜோன் ஹோவார்ட்டிலிருந்து அவுஸ்ரேலியர் பெரும்பாலானோருக்கு முரளியைப் பிடிப்பதில்லை என்பதன பிரதிபலிப்பு - இந்த அணித் தெரிவில் அப்பட்டமாக வெளிப்பட்டிருந்தமையை எவரும் மறுக்காமலிருக்க முடியாது.

ஆனால் ICC டெஸ்ட் அணித் தெரிவிலும் முரளியின் பெயர் இல்லாதது தான் மனதுக்கு சற்று நெருடலாக உள்ளது. இது குறித்து முரளிதரனும் -டெஸ்ட் அணித்தெரிவில் தன்னை ஓரங்கட்டி பழிவாங்கியிருப்பதாக விசனம் தெரிவித்திருந்தார்.

ICC விருதுக்குரிய காலப்பகுதியில் முரளி 8 போட்டிகளில் விளையாடி 68 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். ஆனால், ஷேன் வோணோ 5 போட்டிகளில் விளையாடி 36 விக்கெட்டுக்களையே கைப்பற்றி இருந்தார். இதில் அவர் ஊக்கமருந்து பாவித்து தடைசெய்ததன் பிறகான மீள்வருகையின் 6 மாதங்கள் மட்டுமே கவனத்தில் எடுக்கப்பட்டது.

இந்த டெஸ்ட் அணித்தெரிவில் ஷேன் வோண் தெரிவு செய்யப்பட்டமை குறித்து கருத்து தெரிவித்த ரிச்சி பேனோ - அவர் 6 மாத காலம் மாத்திரம் விளையாடி இருந்தாலும், தான் விளையாடிய 5 போட்டிகளிலும் தனது அசாத்திய திறமையை வெளிப்படுத்தி உள்ளார் என்கிறார் அவர்.

இதன் உண்மைத் தன்மையோ அல்லது இதை ஏற்றுக் கொள்வதோ நிராகரிப்பதோ என்பது ஒரு புறமிருக்க, 2001 ஆம் ஆண்டு விஸ்டன் விருது லக்ஷ்மனுக்கு வழங்கப்பட்டபோது, அது டெண்டுல்கருக்கு வழங்கப்படாததற்கு விஸ்டன் விருது வழங்கும் குழுவினர் - டெண்டுல்கர் அந்தக் காலப்பகுதியில் ஆயிரம் ஓட்டங்களைக் குவித்திருந்தாலும் மிகமுக்கியமான போட்டிகளில் வெற்றிக்கு உதவவில்லை எனக் கூறியிருந்தமை இங்கு நினைவுகூரத்தக்கது.



முரளிதரன்
ஆறு மனமே ஆறு

இதனையே ICC விருதுத் தேர்வாளர்களும் கூறியிருந்தால் முரளிதரனும் இலங்கை ரசிகர்களும் ஏற்றுக் கொண்டிருப்பார்களா?

ஏனென்றால் குறிப்பிட்ட இந்தக் காலப் பகுதியில் தைபு தலைமையிலான சிம்பாப்வே அணியையும் (இத்தொடரிலேயே உலகசாதனை முரளி படைத்தார்.) இங்கிலாந்துடன் ஒரு போட்டியை வெல்வதற்கு முரளிதரன் காரணமாக இருந்தாலும், சொந்த மண்ணில் அவுஸ்ரேலியாவுடன் நடந்த மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் முரளி 28 விக்கெட்டுகளைக் கைப்பற்றி இருந்தும் அவுஸ்ரேலியாவிடம் 3:0 என்று தொடரை இலங்கை அணி இழந்ததையும் நாம் மறந்து விடலாகாது.

எனவே, முரளிக்குப் பதிலாக சமிந்தவாஸுக்காவது உலகடெஸ்ட் அணியில் இடம் கிடைத்ததே என்று எண்ணி ஆறுதல் அடைவதைத் தவிர இலங்கை ரசிகர்களுக்கு வேறுவழியே இல்லை.

- விமலன்.

# தகர்ந்தது ஆதிக்கம்

செரினா வில்லியம்ஸ் விம்பிள்டன் போட்டிகளின்போது தற்போதுள்ள முதல்தர நூறு ரெனிஸ் வீராங்கனைகளில் ஐம்பதுபேர் "OVA"க்களாக இருக்கிறார்கள் என்றார். அதன் கருத்து அத்தனைபேரும் ரஷ்ய மங்கையராக இருக்கிறார்கள் என்பதுதான். அதாவது அனேகமான ரஷ்யப் பெயர்கள் 'ஓவா' என்ற உச்சரிப்புடன் முடிவடையும்.

செரினாவின் வாய்க்குச் சீனிதான் போடவேண்டும். அமெரிக்க ஓபன் இறுதிப் போட்டிக்கு வந்த இருவரும் ரஷ்யர்களே. ஒருவர் சுவெட்லானா குஷ்நெட்சோவா மற்றவர் எலினா டிமென்ரவா. இதில் சம்பியன் பட்டம் பெற்றவர் சுவெட்லானா. இந்தச் சுற்றுப்போட்டியில் இருவருமே ரஷ்யர்களாக அமைந்தது அமெரிக்க ஓபன் வரலாற்றில் முதல்முறை. இந்தவருடம் ரஷ்ய வீராங்கனைகள் கைப்பற்றிய GRAND SLAMS மூன்று. பிரெஞ் ஓபன் அனஸ்ரசியா மிஸ்கீனா, விம்பிள்டன் மரியா சரபோவா இப்போது அமெரிக்க ஓபன் சுவெட்லானா குஷ்நெட்சோவா.



சுவெட்லானா
இது ரஷ்யர் காலம்

அமெரிக்க ஓபன் பொறுத்து இந்தமுறை தரவரிசையில் முதல் நான்கு இடங்களையும் பெற்ற வீராங்கனைகள் இறுதிப் போட்டிக்கு வர இயலவில்லை. இருபத்தியிரண்டு வருடகாலத்தில் அரைஇறுதிக்கப்பால், தரவரிசையில் முதன்மை பெற்றவர் தோல்விகண்டு வெளியேறியதும் இதுவே முதல்முறை.

பத்தொன்பதே வயதான சுவெட்லானா பத்தொன்பதினாயிரம் ரசிகர்கள் முன்னிலையில் எழுபத்தினான்கு நிமிடத்தில் எலினாவைத் தோற்கடித்தபோது "எனது கைகள் வானத்தை நோக்கி உயர்ந்தன. நான் அதிர்ச்சியடைந்தவளானேன்" என்றார். பின்னர் கருத்துக் கூறுகையில் செப்ரெம்பர் பதினொன்றில் அமெரிக்க உலகவர்த்தக மையத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கும், செப்ரெம்பர் முதலாம்திகதி 2004 ஆம் ஆண்டில் (இருவாரங்களுக்கு முன்) ரஷ்யாவில் கொல்லப்பட்ட பள்ளிச்சிறார்களுக்கும் எனது வெற்றியை அர்ப்பணிக்கிறேன் என்று கூறியிருக்கிறார். எலினாவும், சுவெட்லானாவும் அந்தப் போட்டியின்போது கறுப்புப்பட்டி அணிந்தவர்களாகவே விளையாட்டில் ஈடுபட்டிருந்தார்கள்.

எலினாவைப் பொறுத்தவரை இந்தமுறை இரண்டு GRAND SLAMS களில் பங்கு கொண்டு இறுதிப் போட்டிவரை வந்து தோல்வியுற்றவர். அவர் கருத்துக் கூறும்போது இறுதிப் படியைத் தாண்டமுடியாமல் போனமைக்கு என்னிடமுள்ள சில குறைபாடுகள் தான் காரணம். தொடர்ந்து பயிற்சிபெற்று அடுத்தடுத்த முறைகளில் சாதனை படைக்கவேண்டும் என்று விரும்புகிறேன் என்றிருக்கிறார். எது எப்படியோ மகளிர் ரெனிஸ் போட்டிகள் என்றாலே தற்போது ரஷ்யா என்ற நாடுதான் ஞாபகத்துக்கு வருகிறது. அதன் பின்தான் அமெரிக்கா நினைவுக்கு வருகிறது.



எலினா
இது காலத்தின் கோலம்

- நிர்மலன் -

# கண்ணீரும் கதை சொல்லும்

இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ICC சம்பியன்ஷிப் போட்டிகளுடன் தொடர்புபடுத்தி - ரிச்சாட் ஸ்ரேபிள் என்ற வீரர் ஒருவரின் பெயரைச் சொன்னால் இவர் யார் என்பது அனேகருக்குத் தெரியாமல் இருக்கும். என்றாலும் ஐக்கிய அமெரிக்க அணியின் வீரராகத்தான் இருக்கக்கூடும் என்று ஊகிப்பதில் கஸ்டம் இருக்காது. 34 வயதான இவர் தான் ஐக்கிய அமெரிக்க கிரிக்கெட் அணியின் தலைவர். இவர் கரிபியன் தீவுகளில் ஒன்றான ஜமெய்க்காவில் பிறந்தவர். அந்த நாட்டிற்காக முதல்தர கிரிக்கெட் ஆட்டங்களில் ஐந்து வருட அனுபவம் பெற்றவர். இவர் ஒரு சுழற்பந்து வீச்சாளரும் ஆவார்.



றிச்சட் ஸ்ரேபிள்
இதயமே இல்லையா?

இன்று இங்கிலாந்தில் நிற்கும் இவரை மனதில் ஆறாதவடுவாகிவிட்ட ஒரு துயரச் சம்பவத்தின் ஊடாகவே அறிமுகமாகிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

2001 செப்ரெம்பர் 11ம் திகதியன்று - பிரசித்திபெற்ற, தற்போது அழிந்துபோன உலக வர்த்தக மையக் கட்டடத்திற்குப் பக்கத்தில் இருந்த இன்னொரு கட்டடத்தில் தனது அன்றாடக் கடமையாகச் சென்றிருந்தார். வேலை செய்து கொண்டிருக்கும்போது தான் முதலாவது விமானம் உலக வர்த்தக மையத்தின் மீது மோதி வெடித்துச் சிதறியது. அடுத்து அந்தப் பகுதியை நோக்கி விரைந்தபோது இரண்டாவது விமானம் அந்த இரட்டைக் கோபுரத்தின் இரண்டாவது கட்டடத்தையும் ஊடறுத்துச் சென்று வெடித்துச் சிதறியது. அவர் எதனை மனதிற்கொண்டு அத்திசை நோக்கி நகர்ந்தாரோ எது நடந்தேவிட்டது. ஐக்கிய அமெரிக்க கிரிக்கெட் அணியின் ஒரு வீரரும், ஸ்ரேபிளின் நண்பனுமான நிஸாம் ஹாபீஸ் அந்த இரண்டாவது கட்டடத்திலேயே வேலை செய்து கொண்டிருந்தார். அவர் பரிதாபகரமாக அந்த விமானத் தாக்குதலிலே அவலமாக உயிரையும் இழந்தார். ஒருசில நிமிடங்களுக்கு முன் நான் அவருடன் தொலை பேசியில் கதைத்திருந்தேன். ஆனால், நிமிடங்களுக்குள்ளேயே அந்தத் துயரம் நடைபெற்றுவிட்டது என்கிறார்.

ஒரு பத்திரிகை நிருபர். பிரட்லீயின் பந்து வீச்சை ஸ்ரேபிள் எதிர்கொள்வது தொடர்பில் இரட்டைக் கோபுரத் தாக்குதலுடன் ஒப்பிட்டுக் கேட்ட முட்டாள்தனமான கேள்விக்கு விடை அளிக்கும்போதே இந்த வினாவுக்கு அவர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார். இது ஒப்பிடக் கூடிய விடயமல்ல. அந்தத் துயரம் வாழ்வா? சாவா? என்ற பிரச்சினையாக அமைந்த விடயம் என்று கசப்பாகக் கூறியிருக்கிறார். அவரின் துயரம் அவருக்கு. அந்த நிருபரை அதன் பின்னும் ஸ்ரேபிள் மதித்துக் கதைத்தாரே அதுவே பெரிய விடயம்.



அமெரிக்க இரட்டைக் கோபுரம்
மனிதமே சரிந்தது

- மரியா -

# கலக்கப் போவது யாரு?


கில்கிறிஸ்ட்
கனவு காணும் வாழ்க்கை

கிரிக்கெட் ரசிகர்களால் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் கிரிக்கெட்டின் தாய்நாடாகிய இங்கிலாந்தில் இடம்பெற்றுவருகின்றன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் நான்கு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் மூன்று அணிகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் இடத்தைப் பெறும் அணிகள் அரைஇறுதியில் மோத உள்ளன.

இந்த நிலையில், இந்த முறை இறுதிப்போட்டியில் மோதப்போகும் அணிகள் எவை? அவற்றிலும் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றப்போகும் அணி எது? என்பது இறுதிவரை புரியாத புதிராகவே இருக்கப்போகின்றது. கடந்தவருடம் இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றும் என எதிர் பார்க்கப்பட்ட அணிகள் சில, அண்மைய காலப் போட்டிகளில் சோபிக்காத நிலையில் உள்ளன. அதே நேரம் உலகக் கிண் ணப் போட்டிகளில் தள் ளாடிய சில அணிகள் பலம்வாய்ந்த நிலை யில் உள்ளன.

எனவே எதிர்பார்க்கப்படும் முடிவுக ளுக்கும் அப்பால் இந்தமுறை மினி உலகக் கிண்ணப் போட்டிகளின் முடிவுகள் அமைந்துவிடலாம்.

இந்தமுறை மினி உலகக் கிண்ணப் போட்டிகளைப் பொறுத்தவரையில் அவுஸ்ரேலிய அணி பலமான நிலையி லேயே இருக்கின்றது. ஆனால், அண் மையில் இடம்பெற்ற வீடியோக்கோன் கிண்ணப் போட்டிகளில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுடனான இறுதிப் போட்டிகள் அவுஸ்ரேலிய அணியையும் ஏனைய அணிகளால் வெல்லமுடியும் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கியுள்ளது. ஆனாலும், அவுஸ் ரேலிய அணியினர் வெற்றிக்கிண் ணத்தைக் கைப்பற்றக் கடும் பிர யத்தனம் செய்வர் என்பதில் ஐயம் இல்லை.

இலங்கை அணியைப் பொறுத்தவரையில் மிகவும் பலமான நிலையில் உள்ளது. ஆசியக் கிண்ண வெற்றி மற்றும் தென்னாபிரிக்க அணியுடனான வெற்றி என்பனவற்றைத் தொடர்ந்து இலங்கை அணி பலமான நிலையிலேயே உள்ளது. இலங்கை அணியின் பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் ஆகியனபிரகாசித்துவரும் நிலையில்- ஏனைய அணிகளுக்குச் சவாலாக அமை யும் என்பதில் ஐயமில்லை.


சொஹைப் அக்தர்
எங்களுக்கும் காலம் வரும்

பாகிஸ்தான் அணியும் அண்மைய காலங்களில் மிகவும் பலம்வாய்ந்த அணியாகவே காணப்படுகின்றது. அண்மையில் இந்திய அணிக்கு எதிராகப் பெற்றுக்கொண்ட இரு வெற்றிகளும் பாகிஸ்தான் அணியின் பலத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன. வீடியோக் கோன் கிண்ண இறுதிப் போட்டியில் துரதிஷ்டவசமாகத் தோல்வியைத் தழுவியமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

இங்கிலாந்து அணி யைப் பொறுத்தவரை யில் தற்பொழுது பல மான நிலையிலேயே காணப்படுகின்றது. பிளின்டொப்பின் அதிரடி ஆட்டமும் ஹர் மிசனின் பந்துவீச்சும் ஏனைய அணி வீரர்க ளுக்குச் சவாலாக அமையும். அத்துடன், சொந்த மைதானமும், ரசிகர்களின் உற்சா கமும் இங்கிலாந்து அணியைப் பொறுத் தவரையில் பக்கபல மாகவே அமையும்.

நியூசிலாந்து அணியையும் குறைத்து மதிப்பிட முடியாது. சகலதுறை ஆட்ட வீரர்களைக்கொண்ட நியூசிலாந்து அணி, எதிர்பாராத வகையில் திருப்பங்களை ஏற்படுத்தும் என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இதேசமயம் அண்மைய போட்டிகளில் சோபிக்காது விடினும் பலம்வாய்ந்த துடுப்பாட்டப் படையணியைக் கொண்ட இந்திய அணியும் ஏனைய அணிகளுக்குக் கடும்சவால்களைக் கொடுக்கப்போவது உறுதி.

எனவே இந்தமுறை மினி உலகக்கிண்ணச் சம்பியன் யார் என்பதைச் சற்றுப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

- லெஸ்லி.

---

# புதியன புகுதல் எப்போது

மாவன் அத்தபத்து இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவராகிய பின் இலங்கை அணி அதிக வீச்சை வெளிக்காட்டியுள்ளது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். இதேவேளை, இதுவே ஒருசில விமர்சகர்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயம். அதாவது இந்த உயர் நிலையை எவ்வளவு காலம் தக்கவைத்துக் கொள்ளலாம் என்பதே அது. ஏனெனில் தற்போதைய அணி வீரர்களின் மொத்த வயதுச் சராசரியே இந்த அச்சத்தை ஏற்படுத்தியுள் ளது. அதுவும் 2007ம் ஆண்டின் உலகக் கிண்ணப் போட்டிகளைத் தொடர்புபடுத்தி நோக்குகிறார்கள்.


சனத்
வந்ததே நண்பனே நண்பனே

தற்போது இலங்கை அணியின் சராசரி வயது 27.66. இதற்குக் காரணமாக அமைவது இருபது களின் ஆரம்பத்தில் உள்ள மஹ்ரூப், மாலிங்க, லொக்கு ஆராய்ச்சி போன்றவர்கள் இருப்பதேயாகும். இல்லாவிட்டால் சராசரி இன்னமும் கூடியே இருக் கும். தற்போதுள்ள மூத்த வீரர்களின் வயதுகளைப் பார்க்கும்போது மாவன் அத்தப்பத்து (34), சனத் (35), அவிஷ்க (27), மஹேல (27), சங்ககார (27), சமன் ஜயந்த (30), டில்ஷான் (28), களுவிதாரண (32), சமிந்த வாஸ் (30), முரளிதரன் (32), உபுல் சந்தன (32) என்றவாறு போய்க்கொண்டிருக்கிறது. இந்தச் சராசரி 29.77 வயதாக இருக்கிறது. எனவே, 2007 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் போது அநேகமாக எல்லோரும் 30 வயதையும், அணியின் சராசரி வயது முப்பதையும் தாண்டி இருக்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

இங்கு சுட்டிக்காட்டப்படுவது இவர்களது திறமைக்குறைவோ, மனவலிமைக்குறைவோ அல்ல. மாறாக வயதேற்றத்தின் போது - இயல்பாகவே ஏற்படும் தளர்ச்சிகள் பற்றியதாகும். ஆகவே இதுபற்றி இப்போதே சிந்திக்கவேண்டியது அவசியமாகும். 2007 ஆம் ஆண்டு நடைபெறப் போகும் உலகக் கிண்ணப் போட்டிக்கு அப்பாலும் அந்தச் சிந்தனை வளர்ந்து போகவேண்டும். துரதிஸ்டவசமாக ஒரே நேரத்தில் பல உறுப்பினர்களை இழக்க வேண்டி வருமாயின் அணியின் சமபலம் பெரிதும் பாதிக்கப்பட்டு விடும். ஆகவே திட்டமிட்ட வகையில் புதிய உருவாக்கம் வேண்டும். பழையவர்கள் ஓய்வு கொடுக்கப்படவும் வேண்டும். அவுஸ் ரேலிய அணியைப் பொறுத்து முப்பது களை அண்டியவர்கள் நட்சத்திரங்களாக இருந்தாலும், அடுத்த வரிசையில் அதே தரத்து நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். அவுஸ்ரேலியா, வீரர்களை உருவாக்கும் முறைமை அப்படி. இல்லாவிட்டால் மைக் கல் பெவன், அன்டி பிக்கல் போன்றோரை அணியில் இருந்து கழற்ற அவுஸ்ரேலிய தெரிவுச்சபை முனைந் திருக்குமா? இதேவேளை, இந்த விடயத்தில் இலங்கை எங்கே நிற்கிறது? விடயங்களை எப்படிக் கையாளப் போகிறது?


அத்தபத்து
அந்தநாள் ஞாபகம்

- ஜெயா.

---


## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. ஒலிம்பிக் போட்டிகளில் அதிகூடியபதக்கங்கள் பெற்ற நாடு எது?
02. ICC சின்னப் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்று வருகின்றன?
03. 2008 இல் ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெறப் போகின்றன?

விளையாட்டுப் புதிர் 20

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:.........................

முகவரி:.........................

01.
02.
03.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 21.09.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

விலாசம்: விளையாட்டுப் புதிர்-இல.20
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அனுசரணை:
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


---

# தாகம் தணிந்தது

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க ஆறு நாட்களின் முன்பு வரை கெலி ஹோம்ஸ் உலகத் திருவிழாவில் இல்லை என்பதே அவரது முடிவாக இருந்தது. ஏனெனில் பிரித்தானியாவின் முதன்மை நிலையும், ஆனால் நிறைந்த துரதிஸ்டமும் கொண்ட வீராங்கனையாக இவர் கருதப்பட்டாலும் உபாதைகள், உபாதைகள் என்று இவரது எதிர்காலக் குறுக்கீடு மிகப் பலமானதாகவே இருந்தது.

ஆனால் இவருக்கு தன்னிடம் ஒரு பெரும் நம்பிக்கை இருந்தது. அதுதான் அவரது இறுதி வெற்றிக்குக் காரணமாக அமைந்ததோ என்னவோ. ஏதென்ஸ் ஒலிம்பிக்போட்டிகளில் 800 மீற்றர் மற்றும் 1500 மீற்றர் போட்டிகளில் தங்கங்கள் இரண்டைத்தட்டிக்கொண்ட போது தாய் நாடான பிரித்தானியாவின் ஞாயிறுப்பதிப்புகள் அனைத்திலும் முதல் பக்கத்தை அலங்கரித்தது அம்மணியின் படம் தான். இவரைப் பற்றி முன்னாள் தங்கப் பதக்க வீரர் செபாஸ்ரியன் கோ, இவர் சரியான கைகளில் கிடைக்கப் பெறாத - தூசு தட்டப்படாத வீணை என்று ஆதங்கப்பட்டிருந்தார். இறுதியில் இன்று அந்த வீணை நாதம் பேசிவிட்டது. 800 மீற்றர் ஓட்டத்தை ஆரம்பிக்க நின்றபோதே என் கண்கள் கண்ணீரால் நிறைந்து விட்டது. இம்முறை என்முறையா என்று கேள்வி எழுந்தது. தங்கம் வென்றேன். இப்பொழுது தங்கப் பதக்கத்தைப் பார்க்கப் பார்க்க கண்ணீர் பெருகுகிறது என்கிறார். அடுத்தது 1500 மீற்றர் இதில் வெல்வது முடிந்த காரியமா? நான்தான் துரதிஸ்டசாலியாயிற்றே என்று மீண்டும் கண்ணீர். ஆனால், 1500 மீற்றர் ஓட்டத்திலும் தங்கம் வென்றபோது முழு உலகமும் ஒருகணம் கெலிஹோம்சைத் திருப்பிப்பார்த்தது. பிரித்தானியா தடகள வரலாற்றிலேயே கெலி ஹோம்ஸ்தான் முதன்மை வீராங்கனை என்று கொண்டாடியது. இதற்கெல்லாம் அப்பால் ஒரு விடயம் இருக்கிறது. தனது இளமையெல்லாம், திறமை இருந்தும் துயரமாகப் போக இந்த முப்பத்து நான்காவது வயதில் தங்கம் வெல்வோம் என்று எண்ணியது மட்டுமல்ல, இரண்டு தங்கங்கள் வென்று காட்டினாரே இந்தத் திறமைக்கு ஈடு இணைஏது? இந்த வயதில் எம் நாட்டுப் பெண்கள் எல்லாம் வாழ்க்கையின் அரைப்பகுதி முடிந்துவிட்டது என்று தாழ்வுச்சிக்கலில் மாட்டிக்கொள்ளும் இந்நாளில், கெலிஹேம்ஸ் அவர்களுக்கெல்லாம் கூட ஒரு தன்னம்பிக்கையைக் கொடுக்கலாம் என்று தான் ஒற்றைக்கு இரட்டையாகத் தங்கம் வென்று காட்டினாரோ என்னவோ?


ஹெலி ஹோம்ஸ்
பெண்ணுக்குத் தங்க மனசு

- லலி.

விளையாட்டு அரங்கம்

## இரண்டு நிறுவனங்கள் இணைந்து பெரியகுளக்கிராம வீதி புனரமைப்பு

பெரியகுளக் கிராமத்தில் நிகொட் நிறுவனமும், ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனமும் இணைந்து, ஒரு கிலோமீற்றர் நீளமுடைய வீதி ஒன்று செப்பனிடப்பட்டு வருகின்றது.

இந்த வீதியால் விவசாய நடவடிக்கைகளுக்குச் செல்லும் விவசாயிகள் பயன்பெறவுள்ளனர்.

இந்த வீதியின் வேலைத்திட்ட செயற்பாடுகளில் வீதியோரத்திலுள்ள காடுகள் அகற்றப்பட்டு, இரண்டு பாலங்களும் செப்பனிடப்பட்டு வருகின்றன.

இந்த பாலங்களின் வேலைகள் முடிவடைந்ததும் மக்கள் பாவனைக்காக பயன்படுத்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது.




## உலக உணவுத் திட்ட பணியாளருக்கு உதவிகள் இதுவரையில் வழங்கவில்லை

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தில் உலக உணவுத்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட 2004 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் நிறைவடைந்துள்ளபோது, இந்தச் செயற்திட்டத்தில் பணியாற்றியவர்களுக்கான உணவுப் பொருள் மற்றும் உதவிகள் இதுவரை வழங்கப்படவில்லை என பணியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுபற்றி தெரியவருவதாவது -

இவர்களுக்கான உணவுப் பொருட்கள் வந்து சேர்ந்துள்ளபோதும் இதுவரையில் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிகள் வழங்கப்படாததால் பரமன்கிராய், கௌதாரிமுனை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளை தாம் இடைநிறுத்தியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

சிறுவர் பராமரிப்புத் திட்டப் பகுதியினரால் சிறுவர் பராமரிப்பு, சிறுவர் நலம் தொடர்பான பயிற்சி கடந்த 7 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பூநகரிப் பிரதேசத்தின் செயலக மண்டபத்தில் யுனிசெவ் அதிகாரி இராசையா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலர், சிறுவர் உரிமைகள் மேம்படுத்தும் உத்தியோகத்தர் சத்தியவதனி ஆகியோர் உரையாற்றினர். இந்த நிகழ்வின் நன்றியுரையை விவசாய அலுவலர் சிவலிங்கம் ஆற்றினார்.

## காணிகளின் விபரங்களைப் பெற்றபின்பே வவுனியாவில் காணிகளை வாங்கவேண்டும்

### - வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவிப்பு

வவுனியா மாவட்டத்தில் புதிய காணிகள் கொள்வனவு செய்யும் பொதுமக்கள், குறிப்பிட்ட பிரதேச செயலகமூடாக தொடர்பு கொண்டு, அந்த காணிகள் தொடர்பான சரியான விபரங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னரே காணிகளை வாங்கவேண்டும் என வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை வவுனியா அரச செயலகத்தில் நடைபெற்ற காணி தொடர்பான கூட்டத்தின் போதே அரச அதிபர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் காணி உரிமை இல்லாதவர்கள் கூட, தமது காணி எனக் கூறி பல காணிகளை விற்பனை செய்துவருகின்றனர். இதனால் காணிகளை கொள்வனவு செய்பவர்கள் அந்தக் காணிகளின் உரிய பத்திரங்களைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, புதிதாக காணி கொள்வனவு செய்பவர்கள் இது தொடர்பாக அவதானமாக செயற்படல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மாணவி காயம்

வட்டக்கச்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த மாணவியை, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவி காயமடைந்தார். இந்தச் சம்பவத்தில் தங்கராசா மதுரா (வயது 18) என்பரே காயமடைந்தவராவர். இவர் வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வீதியில் பாடசாலை மாணவர்கள் செல்கின்ற நேரத்தில் கூட வாகனத்தின் வேகத்தை குறைத்து செல்வதில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர் (9)

## கிளிநொச்சி - திருநகர் வீதியால் போக்குவரத்து செய்யமுடியாத நிலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து திருநகர் கிராமத்துக்கு செல்லும் வீதி மிகவும் மோசமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இந்த வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனமடைந்தனர்.

இந்த வீதி செம்மணலாக காணப்படுவதால் மழைகாலத்தில் பயணம் செய்வது கஷ்டமாகவுள்ளது.

இந்த வீதியால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் பயணிக்கின்றனர். இதனால் இந்த வீதியை செப்பனிட்டுத் தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டனர்.

## தலைமைத்துவ பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேச சபையால் சனசமூக நிலையங்களைச் சேர்ந்தவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி நேற்றுமுன்தினம் நடததப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியில் 40 இறகும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## தியாக தீபம் திலீபனின் நினைவுநாள் நிகழ்வு

(அக்கராயன்)

தியாக தீபம் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவின் முதலாம் நாள் நிகழ்வுகள் - ஸ்கந்தபுரம் மாவீரர் மண்டபத்தில் அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் ப.சபாரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை அக்கராயன் பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.கரிகாலன் ஏற்றிவைத்தார்.

திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலியுடன், அகவணக்கமும் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக ஸ்கந்தபுரம் கிராமசேவையாளர் மகேந்திரன், கோணாவில் ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் வேந்தன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## மூன்றாம்பிட்டி கிராமத்தில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

மன்னார் மூன்றாம்பிட்டி கிராம மக்கள் குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதால், நீர்த்தாங்கிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் நாள் ஒன்றுக்கு 6 தடவைகள் நீர்த்தாங்கி மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதும்,

தற்பொழுது இந்தக் கிராமத்தில் மூன்று தடவைகள் மட்டுமே நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதால் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரியவருகிறது.

## நிதி மேலாண்மையியற் கல்லூரி கிளிநொச்சியில் திறந்துவைப்பு

நிதித்துறையின் நிதிமேலாண்மையியற் கல்லூரி கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் நிதித்துறை மனிதவள மேம்பாட்டுப் பகுதிப் பொறுப்பாளர் சி.அன்புச்செல்வன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரைக் கணக்காய்வுப் பகுதிப் பொறுப்பாளர் மு.பாரி ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை சேரன் வாணிபப் பணிப்பாளர் ந.இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் கல்லூரிக் கட்டடத்தை சிறப்புவிருந்தினராக வருகைதந்த தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் திறந்து வைத்தார். கட்டடத்தின் செயலகத்தைத் தள அமைப்புப் பகுதிப் பொறுப்பாளர் இ.மணிமாறன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் விழா மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த தியாகி திலீபன் திருவுருப்படத்துக்கு நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் மலர்மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை வடக்கு கிழக்கு மேம்பாட்டு நிறுவனத் தலைவர் தனபாலசிங்கமும், சிறப்புரையை வெ.இளங்குமரனும், நன்றியுரையை க.அறவாணன் வழங்கினர்.

இந்த கல்லூரியில் 53 மாணவர்கள் கல்வியை கற்க இணைந்துள்ளனர். இவர்களுக்கான கல்விச் செலவுகள் அனைத்தும் நிதித்துறையால் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், மாணவர்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா உதவிப் பணமாக வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. பயிற்சியை நிறை செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலுப்பைக்கடவை சுகாதார நிலையம் ஆறுமாதமாகியும் திறக்கப்படவில்லை

(மன்னார்)

மன்னார் இலுப்பைக்கடவைப் பகுதியில் ஆறு மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த ஆரம்ப சுகாதார நிலையம் இன்றுவரை திறக்கப்படவில்லை.

இந்தப் பிரதேச மக்கள் இலுப்பைக்கடவையில் இருந்து முழங்காவில் மருத்துவமனைக்குச் சென்று தமது தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை திறக்கக் கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டும் எதுவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என இந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## முல்லைத்தீவு மருத்துவமனைக்கு 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக தரமுயர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நிகொட் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதற்கான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டு, புனரமைப்புப் பணியை, மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது

அடுத்த மாத காலப்பகுதியில் இதற்கான அடிக்கல் நாட்டப்படுமென நிகொட் திட்ட உதவிப் பணிப்பாளர் ரகுநாதபிள்ளை தெரிவித்தார்.

## கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்லூரியில் உழைக்கக்கற்றல் பயிற்சிநெறி ஆரம்பம்

(வட்டக்கச்சி)

வடகிழக்கு நிர்மாணிகள் வட்ட மேசை என்னும் அமைப்பு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் சமாதானத்துக்கான முதலீடு செய்தல் பிரிவின் ஆதரவுடன், கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் உழைக்கக் கற்றல் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் தேசிய நிர்மாணிகள் சங்க யாழ்ப்பாணக் கிளை தலைவரும், இப்பாட நெறிகள் திட்ட முகாமையாளருமான இராமதாஸ் தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், யு.என்.டி.பி. பிரதிநிதி செலன்ட் றசன்லன்ட் சன்சைன், வண. பிதா ரெஜினோல்ட் அடிகளார், பொருணமிய மதியுரை நிறைவேற்றுப் பணிப்பாளர் திலக் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வின் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ நிர்வாக சேவையின் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன் ஏற்றிவைத்தார். தொழிலநுட்பக் கல்வி நிறுவனக் கொடியை நிறுவன அதிபர் தி.பிரபாகரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிறப்புரைகளை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், சிரான் திட்டப் பணிப்பாளர் இரேணியஸ், செல்வின், வண.பிதா ரெஜினோல்ட் அடிகளார், றசன்லன்ட் சன்சைன், அதிபர் தி.பிரபாகரன், பொருண்மிய மதியுரையக இயக்குநர் ம.சுந்தரமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வை தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கான பாடநெறி உபகரணங்களை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் வழங்கிவைத்தார். வடகிழக்கு ஒப்பந்தக்கார பணியாளருக்கே இந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதில் 40 பயிற்சியாளர்கள் பயிற்சி பெறவுள்ளனர்.

இந்தப் பயிற்சிநெறி நான்கு மாதங்களைக் கொண்டது. இந்தக் கற்கை நெறியில் பயிற்சி பெறுவோருக்கு நாளுக்கு 400 ரூபா கொடுப்பனவு வழங்குவதோடு பயிற்சி முடிந்ததும் ஒரு வருடப் பயிலுநர் என்ற அடிப்படையில் ஒப்பந்தக்காரர் சம்பளம் வழங்க உறுதியளிக்கப்பட்டது. (9)

## மலசலகூடங்கள் அமைக்க நடவடிக்கை

கோணாவில் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால், ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மலசலகூடம் அமைக்கப்படவுள்ளது. காந்திக்கிராமம், கோணாவில், யூனியன்குளக் கிராமத்தில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களுக்கு 44 மலசலகூடங்கள் அமைத்துக் கொடுப்பதறகான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தக் கிராமங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு கிடுகுகள் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

### ஆண்டான்குளப் பிரதேசத்தில்

## சந்தை இல்லாததால் மக்கள் பெரும் சிரமம்

மன்னார் - ஆண்டான்குளம் பிரதேசத்தில் பொதுச்சந்தை ஒன்று இதுவரை அமைக்கப்படாதமையால் அந்தப்பிரதேச மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பிரதேச மக்கள் தமக்குத் தேவையான மரக்கறி வகைகளை வாங்குவதற்கு உயிலங்குளம் சந்தைக்கு செல்லவேண்டியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் பெருமளவிலான மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதால் அபிவிருத்திகளை மேற்கொண்டுவரும் நிறுவனங்கள் இது தொடர்பாக கவனம் எடுக்கவில்லை என இந்தப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

## நூலக வாரம் அனுஷ்டிப்பு

கடந்த 15 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதி வரை நூலக வாரமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நூலக வாரத்தை முன்னிட்டு அதிபர், ஆசிரியர்களால், மாணவர்கள் மத்தியில் நூல்களைப் பேணுவது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்கள் தங்கள் பாடசாலைகளிலுள்ள நூல்களை பேணுவது பற்றியும், மாணவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்த நூலக வாரத்தில் பலர் தமது பிரதேசங்களிலுள்ள நுலகங்களுக்கு பல நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்கண் அவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அவசர நடவடிக்கை

இப்போதெல்லாம் ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்படும்போது - சாதாரண மக்கள் ஏக்கத்துடனேயே அதை எதிர்கொள்கின்றனர். இது ஒரு பீடிகை அல்ல.

உண்மை நிலை இதுதான். எப்போது - எந்தப் பொருளின் விலை உயர்த்தப்படுமோ என்று அரசாங்கம் அறிவிக்குமோ என்ற அச்சத்துடன்தான் நாட்டு மக்கள் ஒவ்வொரு நாளையும் எதிர்கொள்கின்றனர்.

அடிக்கடி அரசாங்கத்தரப்பிலிருந்து விடுக்கப்படும் பொருட்களின் விலை அதிகரிப்புப் பற்றிய அறிவிப்புக்கள் ஒருபுறமிருக்க - நிதியமைச்சர் முதல் நிதியமைச்சு அதிகாரிகள் வரை விடுத்துவரும் பொருட்களின் விலை உயர்வு விரைவில் இடம்பெறும் என்பது போன்ற அறிவிப்புக்களும் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்திவருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவியில் இருந்த காலத்தைவிட - இப்போதைய அரசாங்கத்தின் காலத்தில் சாதாரண மக்கள் வாழ்க்கைத்தர ரீதியாக எதிர்கொள்ளும் நெருக்கடி நிலை மோசமானது.

அடுத்தடுத்து எரிபொருளின் விலைகளை அதிகரித்த அரசாங்கம் - இப்போதும் அதில் திருப்திகாணவில்லை. ஒவ்வொரு விலை அதிகரிப்பின்போதும் சர்வதேச சந்தை விலை உயர்வு, மானியம் என்று கூறி மக்களை ஏமாற்றும் அரசாங்கம் -

இப்போதும்கூட எரிபொருட்களால் தமக்குப் பெருமளவு நட்டம் ஏற்படுகிறது என்றும் - இதனால் எரிபொருட்களின் விலை அதிகரிப்பை எவருமே தடுக்கமுடியாது என்றும் அரசாங்கம் கூறுகின்றது.

மின்சாரக் கட்டணங்களையும் மீண்டும் அதிகரிக்கப் போவதான மிரட்டல் அறிவிப்புக்களும் வெளிவர ஆரம்பித்துவிட்டன. மின்சாரம், எரிபொருள் போன்றவற்றின் கட்டணங்கள் அதிகரிக்கப்படும்போது அதன் தாக்கம் பெரியளவிலானதாகவே இருக்கும்.

அனைத்து உற்பத்தித்துறை, சேவைகள்துறை என்பவற்றுக்குமே மின்சாரம், எரிபொருள் ஆகியனவே அடிப்படைத் தேவைகளாகும்.

உணவுப்பொருட்களின் விலைகளை அதிகரித்து மக்களின் வயிற்றில் நெருப்பைக் கொட்டிய ஆட்சியாளர்கள், இப்போது எரிபொருள், மின்சாரக் கட்டண அதிகரிப்பின் மூலம் - சாதாரண மக்களின் அடிப்படைத் தேவைகளான நுகர்வுப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கவும் காரணமாக அமையவுள்ளனர்.

பொருட்களின் விலை அதிகரிப்பு இயல்பானதே. நாட்டில் பொருளாதார மந்தம் அல்லது வீழ்ச்சிநிலை ஏற்படுகின்ற போது இப்படிப்பட்ட விளைவுகள் தவிர்க்கப்பட முடியாதவை.

ஆனால், இத்தகைய சுமையை இந்த அரசாங்கம் சாதாரண மக்கள் மீது சுமத்திவிட்டு தான் தப்பித்துக் கொள்ள எத்தனிக்கிறது. நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து - நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்டு இப்போது அதன் சுமைகளை மக்கள் மீது சுமத்த அரசாங்கம் முற்படுகிறது.

இலங்கையில் ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசாங்கமுமே - இன்றைய மோசமான பொருளாதார நிலைக்கு தாம் காரணமல்ல என்று கூறித் தப்பமுடியாது.

ஒவ்வொரு அரசாங்கமும் விட்ட தவறும், யுத்தத்துக்காகக் கொட்டிய நிதியும்தான் நாட்டை இன்று மோசமான நிலைக்குள் தள்ளிவிட்டிருக்கிறது.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் வாழ்க்கைச் செலவுப்புள்ளி 10.5 வீதத்தால் அதிகரித்துள்ளதென்றால் -

அதை ஈடுசெய்வதற்கான நிலையில் மக்கள் இருக்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது. அனைத்துச் சுமைகளையும் மக்கள் மீது சுமத்தி அவர்களை அழுத்திப் பிடித்துக்கொண்டிருக்கும் அரசாங்கத்திடமிருந்து சாதாரண மக்கள் எந்த நிவாரணத்தை எதிர்பார்க்கமுடியும்.

ஏதோ பொருளாதார மாற்றத்தைக் கொண்டுவந்து சாதாரண மக்களின் வாழ்வில் புதுயுகத்தைத் தோற்றுவிக்கப்போவதாக தம்பட்டம் அடித்துக்கொண்டு ஆட்சியில் ஏறிய ஜே.வி.பி இப்போது விலை உயர்வுகளை நியாயப்படுத்திவருகிறது.

இப்படியாக - சாதாரண மக்களின் வாழ்க்கை நிலை பற்றி சற்றும் கவலைப்படாமல் விலையுயர்வையே குறியாகக்கொண்டு செயற்படும் அரசாங்கம் நிச்சயமாக மக்களின் விரோதத்தையே சந்திக்கநேரிடும்.

இனிமேலாவது பொருட்களின் விலை அதிகரிப்பைத் தடுப்பது மட்டுமன்றி எதிர்காலத்திலும் கூட இத்தகைய நெருக்கடி நிலை ஏற்படாத வகையில் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கவேண்டும்.

அத்தகைய பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாகவே - விலைவாசி அதிகரிப்புக்கும், வருமான மட்டத்துக்கும் இடையிலான சமநிலையைப் பேணமுடியும். அதுதான் ஏற்படுத்தவேண்டிய அவசர நடவடிக்கையாகும்.

## நாடும் நடப்பும்

செய்தி- எவ்வித பலனுமின்றி சொல்ஹெய்ம் திரும்பினார்.




# திருமலையிலுள்ள முகாம்களை அகற்றுமாறு பாதுகாப்பு அமைச்சு புலிகளிடம் கோரிக்கை!

(கொழும்பு)

திருகோணமலையில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமகளை அகற்றுமாறு பாதுகாப்பு அமைச்சு, விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சம்பூர் பகுதியிலும், திருகோணமலை துறைமுகத்தைச் சூழவுள்ள இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாக இராணுவத் தரப்பு கருதுவதாகவும், இந்த விடயம் குறித்து இராணுவத் தரப்பு தேசிய பாதுகாப்பு ஆணைகுழுவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதனையடுத்தே பாதுகாப்பு அமைச்சு திருகோணமலையிலிருந்து விடுதலைப் புலிகளின் முகாம்களை அகற்றுமாறு வேண்டுகோளை விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழ விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள பதுங்குகுழிகளிலும், காவல் அரண்களிலும் அதி நவீன செய்மதி உணர்திறன் கருவிகளான ராடர்களும், நெடுந்தூர மற்றும் குறுந்தூர கனரக ஆயுதங்களும் பொருத்தப்பட்டுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், இதனால் திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பு தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதாகவும் படைத் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேசக் கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபடும் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அபாயம் இருப்பது எதிர்காலத்தில் சர்வதேச கப்பல்களின் வருகையைக் குறைத்து விடலாம் என்ற அச்சமும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரியாகப் பதவியேற்றுள்ள கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தனது பதவியேற்பு நிகழ்வின்போது திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# இலங்கை – இந்திய உறவை பலப்படுத்த ஜனாதிபதி ஆர்வம்



(கொழும்பு)

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் மேலும் முன்னேற்றமடையவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராகப் பதவியேற்றுள்ள நிருபமா ராவ், நேற்றுமுன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்து, உத்தியோகபூர்வமாகத் தனது பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் இடம்பெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதி இந்த விருப்பத்தை இந்திய தூதுவரிடம் வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் தற்போது உள்ள உறவுகள் மேலும் அதிகரிக்கப்படவேண்டும். இலங்கை விவகாரங்களில் இந்தியா கூடுதல் பங்களிப்பை வழங்கவேணடும் என தான் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். நேற்றைய சந்திப்பில் இரு தரப்பு இராஜதந்திர உறவுகளை மேலும் வலுவாக்குவது உட்பட இரு தரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

# தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 614 பேரின் ஒய்வூதியம் மீளாய்வு!

(சாவகச்சேரி)

ஓய்வூதியத் திணைக்களத்தின் 6/2004 சுற்றுநிருபத்திற்கமைய இதுவரை தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் 614 பேருக்கு ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

யூலை மாதம் 291 பேருக்கும், ஓகஸ்ட் மாதம் 106 பேருக்கும், செப்ரெம்பர் மாதம் 217 பேருக்கும் இவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டது. இதில் யூலை மாதம் 81 பேருக்கும், ஓகஸ்ட் மாதம் 34 பேருக்கும், செப்ரெம்பர் மாதம் 43 பேருக்குமாக மொத்தம் 158 பேருக்கு ஓய்வூதியத்தில் அதிகரிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தமுள்ள 1481 ஓய்வூதியர்களில் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் பெறும் 445 பேரையும் தவிர ஏனைய 1036 பேரில் மேற்படி சுற்றுநிருபத்திற்கு அமைவாகத் தகுதியான ஓய்வூதியர்களில் சுமார் 80 வீதமானோருக்கு ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்பட்டு அதிகரிப்பு ஏற்பட்டவர்களுக்கு ஜனவரி 2004 ஆம் ஆண்டு முதல் நிலுவையுடன் அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுபவர்களதும் மற்றும் கோவைகளில் பூரண விபரம் இல்லாதவர்களதும், கோவைகளே மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளது. இவற்றுக்கான பணிகளைத் தொடர்ந்தும் ஓய்வூதியப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர். (24)

# உடுவில் கோட்ட மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்க திட்டம்

உடுவில் கல்விக் கோட்ட ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்குணவு வழங்கப்படவுள்ளது. மாதத்தில் இருதடவை தரம் 1 முதல் தரம் 2 வரையான மாணவர்களுக்கு உளநல ஆரோக்கியத்தை மேற்கொள்ளும் நோக்கில் இலைக்கஞ்சி தயாரித்து வழங்கவேண்டும் என உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் பாடசாலை அதிபர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தமாதம் இறுதிப் பகுதியில் நடைமுறைக்குவரும் பொருட்டு பழைய மாணவர்கள், அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இதனை வழங்குமாறும், இலைக் கஞ்சி தயாரிக்கும் பொருட்களது விபரங்களையும் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## கடலோட்டு இயந்திரவியல்

# பயிற்சி நெறியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ் நாளை வழங்கப்படும்

யாழ்.கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் பெப்ரவரி மாதம் தொடங்கி மூன்றுமாதகால கடலக தொழில்நுட்ப பயிற்சிநெறிகளை முடித்துக்கொண்ட பயிற்சியாளர்களுக்கு நாளை சான்றிதழ்கள் வழங்கப்படுமென கல்லூரி அதிபர் இ. செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மேலும் வைகாசிமாதம்முதல் மூன்றுமாத காலப் பயிற்சி நெறிகளை முடித்துக்கொண்டவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். கொடுபபனவுகளைப் பெற்றுக்கொள்வோர் கல்லூரி வளாகத்திற்கு காரியாலய நேரத்தில் வருகைதந்து பெற்றுக்கொள்ளவும். சானறிதழ்கள் பெறுபவர்கள் நாளை காலை 9 மணிக்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (206)

தெற்குத் திசையிலிருந்து.... இந்திரஜித்

# அரசியற் கட்சிகளின் உட்பூசலால் சமாதானப் பேச்சுக்கு முட்டுக்கட்டை



சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகிறதோ? அல்லது ஆரம்பமாகும் சாத்தியம் இல்லையோ என்பதற்கு அப்பால் - இன்று இலங்கையில் பிரதான கட்சிகளின் உட்பூசல், அரசியல் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கடசியைப் பொறுதத வரையில், அந்தக் கட்சி முன்னர் உட்பூசல்களால் பாதிக்கப்பட்டிருந்தபோதும், ஜனாதிபதி ஆட்சியைக் கலைத்த பின்னரும் அநத உட்பூசல் அடங்கிப்போய் விட்டது என்றே இதுவரை நம்பப்படுகிறது.

கருஜெயசூரியவுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இவ்வாறான உட்பூசல் இருப்பதாகக் கூறப்பட்டு வந்தபோதும், அது இதுவரைகாலமும் பூதாகரமாக மாறவில்லை.

ஆனால், ஜனாதிபதியின் கீழ் இயங்கும் சிறிலங்கா சுதந்திர கட்சிக்குள் இன்று இவ்வாறானதொரு பூதாகார நிலைமை உருவாகியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் - அரசாங்கம் பொறுப்பேற்ற நாளிலிருந்து முறுகல் நிலை இருந்துவந்தது.

தற்சமயம் அது வெளியில் வரத் தொடங்கியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த வரையில், அங்கு தற்சமயம் ஜனாதிபதி பிரிவு, மங்கள பிரிவு மற்றும் மஹிந்த பிரிவு என்று மூன்று பிரிவுகள் இருப்பதாகவே கருதப்படுகிறது.

இதில், மங்கள பிரிவுக்குள்- தேசப்பற்றாளர் அமைப்பின் உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க, மற்றும் அனுர பண்டாரநாயக்க ஆகியோர் அங்கம் பெறுகின்றனர்.

மஹிந்த தரப்பில் கட்சியின் பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன இரண்டு பக்கமும் இருப்பவரை போல செயற்பட்டு வருகிறார்.

பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைப்பதா? அல்லது மாற்று ஒருவரை நியமிப்பதா? என்ற விடயம் என்று பிரச்சினையாக கிளம்பியதோ? அன்றே ஜனாதிபதிக்கும், மஹிந்தவுக்கும் இடையிலான முறுகல் தொடர்பில் - நாட்டு மக்கள் பேசத்தொடங்கி விட்டார்கள்.

அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ



தனது அரசியல் நிலைப்பாட்டை உயர்த்திக் கொள்ளும் பணிகளில் ஈடுபட ஆரம்பித்து விட்டார்.

> **ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் - அரசாங்கம் பொறுப்பேற்ற நாளிலிருந்து முறுகல் நிலை இருந்துவந்தது. தற்சமயம் அது வெளியில் வரத் தொடங்கியுள்ளது.**

வடக்கு-கிழக்கை தவிர்ந்த நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விஜயம் செய்து, மக்கள் மத்தியில் தாமே பிரதமர் என்பதை ஏற்றுக் கொள்ளச் செய்யும் செயற்பாட்டில் ஈடுபடத் தொடங்கி விட்டார்.

அது இதுவரைக்கும் அவரைப் பொறுத்தவரையில் சாதகமாகவே சென்று கொண்டிருக்கிறது எனக் கூறலாம். இந்த நிலையில்தான், புதிய பிரச்சினை உருவாகியுள்ளது.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திர கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார்? என்ற கேள்வி எழுந்திருந்தது. அதற்குப் பெரும்பாலானோர் கூறிய பதில் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகத் தகுதியுடையவர் என்பதாகும்.

அண்மையில் ஜனாதிபதி - லண்டன் சென்றிருந்த வேளையில், கட்சியின் உட்பூசலுக்கு மகுடம் சூடடும் சில நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. அதில் முக்கியமானது தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காக அமைக்கப்படப்போகும் தலைமையகத்தின் அடிக்கல் நாட்டு நிகழ்வுக்கு, ஜனாதிபதி சமூகம் தராமல் இருந்தமையாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் சகோதரருமான அநுர பண்டாரநாயக்கவும் அந்த நிகழ்வில் கலந்துக்கொள்வதைத் தவிர்த்துக்கொண்டார்.

எனினும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - நிகழ்வில் பங்கு கொண்டு, அடிக்கல்லை நாட்டி வைத்தார். இதனை முழுமையாக அரசாங்க ஊடகங்களே ஜனாதிபதிக்கு எதிரான செயற்பாடாகச் சித்தரிக்கத் தொடங்கிவிட்டன.

ஜனாதிபதி - குறிப்பிட்ட நிகழ்வை தாம் வந்த பின்னர் மேற்கொள்ளலாம் எனக் கூறியிருந்தபோதும், மஹிந்த ராஜபக்ஷ அதனை மறுத்து, தாமே அடிக்கல்லை நாட்டினார் என்ற தகவலே வெளியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், லண்டனில் இருந்து திரும்பிய பின்னர், ஜனாதிபதி - மஹிந்த ராஜபக்ஷவையும், மைத்திரிபால சிறிசேனவையும் பேச்சுக்கு அழைத்திருந்தார்.

இதில் ஜனாதிபதி - அடுத்து ஜனாதிபதி வேட்பாளர் நிலை குறித்து பிரதமரிடம் வினவியுள்ளார். இதற்குப் பதிலளித்த பிரதமர்- அதனை ஜனாதிபதியே முடிவுசெய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதனையடுத்து, தமது சகோதரரான அனுர பண்டாரநாயக்க அடுத்த ஜனாதிபதி வேட்பாளருக்கான நிலையைத் தமக்குத் தருமாறு கேட்டுள்ளதை - மஹிந்தவுக்கு தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ - தாம் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளருக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமானால், அதனைச் சமர்பிக்கவும், அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் - அரசியல் அனுபவத்தை நிரூபிக்க வேண்டுமானால், அதற்கும் தயாராக உள்ளதாக தெவித்தார். நிலைமை சூடாவதைப் புரிந்து கொண்ட ஜனாதிபதி - சமாளித்துக் கொண்டு, அவ்வாறு எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளத் தேவையில்லை. பண்டாரநாயக்க பரம்பரைதான் நாட்டை ஆள வேண்டும் என்றில்லை.

ஏனையவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதை தாம் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் பிரச்சினை தீரகப்படாவிட்டாலும், அன்றைய சந்திப்பு - முறுகலை எச்சமாக வைத்து விட்டு முடிவடைந்தது. எனவே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் முறுகல் இன்றும் தொடரப்போவதை அது சுட்டி நிற்கிறது எனக்கொள்ளலாம்.

தேசிய அரசியலின் பிந்திய நிலை -

கட்சி முறுகல் என்பதற்கு அப்பால், தேசிய இனப்பிரச்சினை தீர்வில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைவிட ஐக்கிய தேசியக் கட்சி ஸ்திரமான நிலையை கடைப்பிடிக்கிறது என்றே சொல்ல



வேண்டும்.

ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த வேளையில், ஐக்கிய தேசியக் கட்சி ஸ்திரமான கொள்கை ஒன்றை தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் கடைப்பிடிக்காமல் இருந்து வந்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தது.

ஆனால், இடைக்காலத்தில் ஆளும் கட்சியாக மாறி, பின்னர் தற்சமயம் எதிர்கட்சியாக மாறியுள்ள நிலையில் அந்தக் கட்சியிடம் தெளிவான கொள்கை ஒன்று ஏற்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

தாம் ஆட்சியில் இருந்தபோது முன்வைத்த தீர்வுத் திட்டத்தின் பின்னரே தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்கால தன்னாட்சி தீர்வுத் திட்டத்தை முன்வைத்தனர்.

எனவே அதனை மையமாக வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தாம் தயார் என்ற நிலைப்பாட்டையே ஐக்கிய தேசிய கட்சி கொண்டுள்ளது.

ஆனால், ஆளும் கட்சியோ, ஜேவி.பியின் முரண்பட்ட போக்கினால் நிலைதடுமாறி, என்றோ இலங்கையின் வரலாற்றிலிருந்து நீக்கப்பட்டு விட்ட அனைத்துக் கட்சிகளையும் இணைததுக்கொண்டு, அவர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொண்டு, பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்ற யோசனையை முன்வைத்தள்ளது.

இதனை அடிப்படையிலேயே மக்கள் நிராகரித்து விடுவர் என்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெரியும். எனவே, அந்தக் கட்சி பழம் நழுவி பாலில் விழும் வரையிலான செயற்பாட்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. தற்சமயம் ஐக்கிய தேசிய கட்சி சொல்வதெல்லாம் நாட்டில் நடைபெறுகிறது என மக்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் எரிபொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் என முன்னாள் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன அண்மையில் கூறியிருந்தார். இதனை நிரூபிக்கும் வகையில் அதன் காரணமாக மக்கள் மத்தியில் ஐக்கிய தேசிய கட்சி தொடர்பான எண்ணங்கள் மீண்டும் துளிர்விட்டு வருகின்றன.

ஜே.வி.பியின் நிர்வாகத்தை மக்கள் முன்னர் ஏற்றுக்கொண்ட போதிலும், தற்சமயம் அது ஒரு அரசியல் நகர்வு என்பதை புரிந்து வருகிறார்கள்.

ஆளும் கட்சியிலிருந்துகொண்டு அதனை குற்றம் கூறி, தமது அரசியலை முன்னகர்த்திச் செல்



வதே ஜே.வி.பியின் நகர்வாகும். அதனை மக்கள் உணரத்தலைப்பட்டுள்ளார்கள்.

அண்மையில் சர்வதேச நாணய நிதியத்திடம் ஜே.வி.பி முன்வைத்த கோரிக்கையானது, அவர்கள் வடக்கு-கிழக்கு யுத்தம் நாட்டின் ஒரு மூலையில் நடந்துகொண்டிருக்கிறது என்ற தொனியில் அமைந்திருந்ததை காணமுடிகிறது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவி வழங்கும்போது, தமிழிழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைக்கக்கூடாது என அவர்கள் தெரிவித்திருப்பது, சமாதானம் இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் மக்கள் செல்வாக்கைப் பெறலாம் என்ற நிலையையே உணர்த்தி நிற்கிறது.

இதனைச் சாதாரண சிங்கள மக்கள்கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை ஜே.வி.பியால் ஏன் புரிந்துக்கொள்ள முடியவில்லை என்பது தான் புதிராக இருக்கிறது. எனவே, தற்போதைய தென்னிலங்கை அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கில் தொடர்சியான உயர்வுப்போக்கு ஒன்று காணப்படுவதாக எடுத்துக் கொள்ளமுடிகிறது.

---

நோயியல் எஸ்.ஜெயா

# மலேரியா

பருவகால மழையைத் தொடர்நது பெருகிவரும் நீர்நிலைகள், குட்டைகள், அழுக்குகள் சாக்கடைகள் என்பவற்றில் தேங்கும் நீர்களால் நுளம்பின் பெருக்கமும் அதிகரிக்கின்றது. இவ்வாறு அதிகரிக்கும் நுளம்புப் பெருக்கத்தால், பல தொற்றுநோய்கள் தோன்றும் அபாயச் சூழ்நிலைகள் காணப்படுகின்றன.

இந்த வகையில் மலேரியா என்பதும் ஒரு வகைத் தொற்று நோயாகும். இது அனோபிலிஸ் எனும் நுளம்பு வகையால் பரப்பப்படும் நோயாகும். இந்த மலேரியாவை உண்டாக்கும் கிருமி நிர்வாண முதலுரு (**Plasmodium**) எனப்படுகிறது.

மலேரியா நோயாளிகளை எடுத்துக் கொண்டால், இவர்களுடைய செங்குருதிச் சிறுதுணிக்கைகளிலே இந்த நிர்வாண முதலுருக்களைக் காணலாம். இவற்றை நுளம்புகள் உறிஞ்சிக் குடிக்க, இக் கிருமிகள் நுளம்புகளுக்குள்ளே சென்று, அங்கே இவை மேலும் வளர்ச்சியடைந்து, எண்ணிக்கையில் பெருகி இறுதியில் நுளம்பினுடைய உமிழ்நீர் சுரப்பிகளிடையே ஒன்று கூடுகின்றது.

இந்த நுளம்புகள் சுகதேகி ஒருவருக்குக் கடிக்கும்போது, நிர்வாண முதலுருக் கிருமிகள் நிறைந்த உமிழ்நீர் சிறிது தோலுக்குள்ளே புகுந்து விடுகின்றது.

இதன் பின்னர் கடிக்கப்பட்டவருடைய செங்குருதிச் சிறுதுணிக்கைகளினுள்ளே முதலுருகிருமிகள் மேலும் எண்ணிக்கையில் பெரும் வளர்ச்சியடைந்து எண்ணிக்கையில் பெருகி, அதன் பின்னர் இந்தக் கிருமிகள் காலத்துக்குக் காலம் ஈரலின் குருதிக் கால்வாய்க்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

இந்த நடைமுறை சாதாரணமாக ஒன்றை விட்ட ஒரு நாள் நடைபெறுவதோடு, கிருமிகள் - குருதிக் கால்வாயினுள்ளே விடப்படும் நாட்களில் கடுமையான காய்ச்சல் உண்டாகின்றது. இத்துடன் உடம்பு குளிர்ந்து நடுக்கம் உண்டாகின்றது. இதுவே மலேரியா நோயாளி ஒருவருக்கு நடுக்கத்துடன் காய்ச்சல் வருவதற்கான காரணமாகும்.

இப்படியாக காலத்துக்குக் காலம காய்ச்சல் உண்டாவது ஒரு குறிப்பிட்ட காலம் முழுவதும் தொடர்ச்சியாக இருக்கும் காய்ச்சல் இல்லாத இடை நாட்களிலேயே நோயாளிக்கு சிறிது சுகம் காணப்படும் ஆனால், நாட் செல்லச்செல்ல நோயாளி பலவீனமடைந்து கொண்டே போவர். அத்துடன் அவருடைய செங் குருதி சிறுதுணிக்கைகள் மேன் மேலும் அழிக்கப்பட்டுவிடும்.

> **நாம் மலேரியாவைத் தடுப்பதற்காக முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதொன்றாகும். வீடு வீடாக மலத்தியோன் தெளிக்க வருபவர்களைத் தடை செய்யாது, அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி, சிரட்டை, பேணி ஆகியவற்றிலே தண்ணீர் சேருவதைத் தடுத்து, நுளம்புக் குடம்பிகளை உண்ணும் மீன் வகைகளை நீர் நிலைகளில் வளர்ப்பதாலும், மலேரியாவினைக் கட்டுப்படுத்தலாம்.**

இது அவருக்கு குருதிச் சோகையை உண்டாக்கும். ஒருவர் சிகிசசை இல்லாது நெடுங்காலம் நோய் வாய்ப்பட்டிருந்து சுகமடைவாராயின், அவர் பல மாதகாலம் குருதிச் சோகை காரணமாக நலிவுற்றிருப்பார்.

ஒருவருக்கு மீண்டும் மீண்டும் நோய்த்தாக்கம் ஏற்படுமாயின், அவரது உடல் வலுக்குன்றி, வேறு நோய்கள் இலகுவாக தொற்றுவதற்கும் ஏன் மரணங்கூட சம்பவிக்கவும் நேரிடலாம்.

எனவே, நாம் ஒருவருக்கு மலேரியா கண்டவுடன் அவருக்கு அண்மையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலையில் போதிய சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும் ஆரம்பத்திலேயேநோயைக் கண்டு சிகிச்சை செய்தால் இலகுவில் நோயை வெற்றி கொண்டுவிடலாம்.

நாம் மலேரியாவைத் தடுப்பதற்காக முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதொன்றாகும். வீடு வீடாக மலத்தியோன் தெளிக்க வருபவர்களைத் தடை செய்யாது, அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு, வீட்டுக்கு அண்மையில் தண்ணீர்தேங்கி நிற்காது, செய்தல் வேண்டும்.

சிரட்டை, பேணி ஆகியவற்றிலே தண்ணீர் சேருவதைத் தடுப்பதாலும், நுளம்புக் குடம்பிகளை உண்ணும் மீன் வகைகளை நீர் நிலைகளில் வளர்ப்பதாலும், மலேரியாவினைக் கட்டுப்படுத்தலாம்.

உங்களில் யாருக்காவது மலேரியா இருப்பதாகக சந்தேகம் ஏற்படின் அண்மையில் உள்ள வைத்தியசாலையில் குருதிப் பரிசோதனை செய்து மலேரியா உள்ளதா அல்லது இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அரசாங்க வைத்தியசாலைகள் இலவசமாகவே இந்தப் பரிசோதனையை மேற்கொள்கின்றன.

எனவே, ஒவ்வொருவரும் தமது சூழலை தூய்மையாக வைத்திருப்பதோடு, தமது சுகநலத்தினைப் பேணிக் கொள்தல் அவசியமாகும் 'வெள்ளம் வரும் முன் அணை போடுவோம் - மலேரியா வருமுன் நுளம்புகளை அழிப்போம்.

# ஈரவிழிகளில் இதய அஞ்சலி

**தோற்றம்**
17 - 04 - 1953



**மறைவு**
18 - 09 - 2004

## அமரர் திருமதி திலகவதி குமரவேல்

### பொது முகாமையாளர்
### சுன்னாகம் பல.நோ.கூட்டுறவுச் சங்கம்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் தலைவரும், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச இயக்குநர் சபை உறுப்பினருமான திரு. சி.குமரவேல் அவர்களின் துணைவியார் கு.திலகவதி அவர்களின் மறைவுச் செய்திகேட்டு கூட்டுறவாளர்களாகிய நாம் பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்**

☆ யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் அங்கத்துவ கூட்டுறவுச் சங்கங்களும்,

☆ யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசமும் அங்கத்துவ கூட்டுறவுச் சங்கங்களும்

☆ யாழ். மாவட்ட பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அங்கத்துவ கூட்டுறவுச் சங்கங்களும்,

☆ யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அங்கத்துவ கூட்டுறவுச் சங்கங்களும்,

☆ யாழ். மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அங்கத்துவ கூட்டுறவுச் சங்கங்களும்,

☆ யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையும், அங்கத்துவ கூட்டுறவுச் சங்கங்களும்

(c-3162)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 5 ஆயிரம் தாதியர்கள் அடுத்த வருடம் ஆட்சேர்ப்பு!

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் நோக்கில் அடுத்த ஆண்டில் ஐயாயிரம் தாதிமாரை புதிதாகச் சேர்த்துக்கொள்ளவிருப்பதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு நவலோக வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு, 19 வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு நேற்றுக்காலை இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

நாடெங்குமுள்ள வைத்தியசாலைகளில் 20 ஆயிரம் தாதியருக்கு வெற்றிடங்கள் உள்ளன.

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் வருடந்தோறும் பயிற்றப்பட்டு வெளியேறும் 3000 தாதிமார் வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதியதாக இல்லை.

எனவே கூடுதலான தாதிமாரை பயிற்றுவிப்பதற்கு தனியார்துறையினரின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க வைத்தியர்கள் தனிப்பட்ட முறையில் சேவையாற்றுவதை அங்கீகரிக்கும் நகல் சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்படுகிறது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## மருத்துவபீட மாணவி....

பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் மற்றும் குகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இருதரப்பினருக்குமிடையே ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து புஸ்பமாலா தனது போராட்டத்தினைக் கைவிட்டார்.

புஸ்பமாலா தனது போராட்டத்தைக் கைவிடாவிட்டால் அவரை பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் துணைவேந்தர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி செயலக அறிக்கைக்கு.....

அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காது தாமதப்படுத்தும் அதேநேரம், நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை ஜனாதிபதி சந்தித்த பின்னர், ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையானது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வருவதற்கு தாமதம் காட்டிவருவதாக ஜனாதிபதி செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையானது, இலங்கை அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதிலிருந்து விலகிச்செல்கின்றதோ என்ற தோற்றத்தை தமிழ்மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை இராணுவத்திடமிருந்தே பெற்றுக் கொண்டார்கள். அதேபோல் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றோரே பாதாள உலகக் கும்பலுக்கு ஆயுதங்களை வழங்குகின்றனர். விடுதலைப் புலிகள் பாதாள உலகக் கும்பலுக்கு ஆயுதங்களை வழங்கியதில்லை.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் எப்போதும் போரொன்றில் பங்கேற்கப்போவதில்லை. அப்பாவி மக்களையே அவர்கள் போரில் ஈடுபடுத்துகிறார்கள்.

தமிழ்மக்கள் உண்மையான சமாதானத்தை விரும்புகிறார்கள் என்ற செய்தியை தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகளுக்கு கூறவேண்டும்.

சமாதானத்தையும் நீதியையும் நேசித்த மக்கள் மத்தியில் - குழப்பங்களையும் நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்தி, சமாதான சூழலை சீர்குலைக்கும் வகையில், தெற்கிலே சில தீயசக்திகள் செயற்பட்டு வருகின்றன.

அரசியல்கட்சிகளும், அரசியல்வாதிகளும் எப்போதும் போரில் வந்து பங்குகொள்ளப்போவதில்லை. மாறாக சாதாரண அப்பாவி மக்களைத்தான் ஏவிவிடுவார்கள்.

சமாதானச்சூழலை சீர்குலைதது போரை நோக்கி பிரசாரத்தை முன்னெடுக்கின்ற சக்திகளுக்கு சரியான பாடத்தைக் கற்பிக்க வேண்டும். இதற்கு சாதாரண மக்களைத் தான் பலி கொடுக்க முனைகின்றனர் என்ற உண்மை நிலையை எடுத்துக்கூற வேண்டும்.

இந்தச் சக்திகளால் தென்னிலங்கையிலே தவறான கருத்துக்களும் தவறான பிரசாரங்களும் இடம்பெற்று வருகின்றன. இதனையிட்டு நாம் வேதனை அடைகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் உண்மையான ஒரு சமாதானத்தைத்தான் நேசிக்கிறார்கள். இந்த உண்மையை தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

ஒரு தீர்வு இல்லாத, நன்மையில்லாத பேச்சுவார்த்தை அல்லது சமாதானம் என்ற நிலையில் உண்மையிலேயே எமது மக்கள் நம்பிக்கையிழந்து வருகிறார்கள்.

இந்த நிலை தொடர்பாக எமது தலைமைப்பீடம் கடுமையாகப் பரிசீலித்து வருகிறது. இது தொடர்பான நிலைமைகளை தொடர்ச்சியாக அவதானித்து வருகிறோம்.

போர்நிறுத்த உடன்பாட்டின்படி படையினர் மக்கள் வாழ்விடங்களில் இருந்து விலகி வெளியேற்றப்பட்ட மக்கள் தமது சொந்த இருபபிடங்களில் குடியேறியிருக்க வேண்டும். இதனூடாக இன நெருக்குவாரங்கள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். மக்களின் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இரண்டரை ஆண்டு காலமாக சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டும் இந்த நிலைகள் நிறைவேறாத சூழலில் மக்கள் மிகுந்த நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கான செயலகத்தில் நடைபெற்றது.


## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர்
**திருமதி திலகவதி குமரவேல்**



அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு பேரதிர்ச்சி அடைகிறோம். அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு தாங்கொணாத் துயரைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

சுன்னாகம் ப.நோ.கூ.சங்க தலைவரும், யாழ். மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவரும், மறைந்த திலகவதி அவர்களின் கணவருமான திரு.சி. குமரவேல் அவர்களுக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும், சுற்றத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர், பணியாளர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கம்

(சி-3160)


# இடர்காலக் கொடுப்பனவாக மூவாயிரம் ரூபாவை வழங்குக!

## தொழிற்சங்கக் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா இடர்கால கொடுப்பனவை வழங்குமாறு அரசாங்க தொழிற்சங்கக் கூட்டமைப்பு, நிதி அமைச்சர் சரத் அமுனுகமவை நாளை சந்தித்து வலியுறுத்தவுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் 70 சதவீதமாக அதிகரிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

தற்போது பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால் அரசாங்க ஊழியர்களின் வருமானம் போதியதாக இல்லாமையால் வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கும்வரை இடர்காலக் கொடுப்பனவாக மூவாயிரம் ரூபாவை இந்த மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கவேண்டும் என்று நிதியமைச்சருடனான இந்தச் சந்திப்பில் அரசாங்க தொழிற்சங்கக் கூட்டமைப்பு வலியுறுத்தவுள்ளது.

இதேவேளை அரசாங்க ஊழியர்களுக்கு அவர்கள் கோருவது போன்று அதிகரித்த சம்பளத்தை வழங்குவதற்கு வருடம் ஒன்றுக்கு 9 ஆயிரம் கோடி ரூபா மேலும் தேவைப்படும் என பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழு தயாரித்துள்ள பரிந்துரை செயற்படுத்தப்பட்ட பின்னர் அனைத்து அரச ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு கிடைக்கும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிங்க தொடங்கொட தெரிவித்தார்.

## மாரடைப்பால் மரணம்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் கு.திலகவதி (வயது52) மாரடைப்பால் நேற்று மதியம் உயிரிழந்தார்.

நேற்றுக்காலை அலுவலக பணிக்காக கூட்டுறவுச் சங்கத்திற்குச் சென்ற இவர், மதியம் நெஞ்சு வலிப்பதாகத் தெரிவித்த இவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோதும், இவர் இடைவழியில் உயிரிழந்தார் எனத் தெரியவருகிறது.

## கைதடி...

ஆரம்பிக்க முடியாதுள்ளது.காரணம் இந்த விடயம் தொடர்பான வழக்கு ஒன்று நீதிமன்றில் நடைபெறுகின்றது.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். மேற்படி செயல், சொத்துக் கடளை சட்டத்தின் கீழ் பாரிய குற்றம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதைவிட தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை 100 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாத காலப் பகுதியில் முழுமையாக ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் வைத்தியர்கள் பெரும்பாலும் யாழ்.மாவட்டத்தில் பணிபுரிய முன்வருவதில்லை இதன் காரணத்தால் வைத்தியர் பற்றாக்குறை நிலவுகின்றது எனவும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப் பட்டது.

இந்தக் கூட்டத்தில் விசேட திட்டங்களை நிகொட், நியாப், நீப் நிறுவனங்களின் தலைவர்கள், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர், ஆயுர்வேதவைத்தியசாலை, வவுனியா வீதிஅபிவிருத்தி அதிகாரசபை மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர்கள், மாநகரசபை ஆணையாளர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர்கள் தமது செயற்திட்டம் தொடர்பாகவும் தேவைகள் தொடர்பாகவும் விளக்கினர்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ரவிராஜ், சிவாஜிலிங்கம் பத்மினி சிதம்பரநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன் மா .க. ஈழவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஈ.பி.டி.பி. புத்தளம்....

தப்பியதாகத் தெரியவருகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. வேட்பாளராக போட்டியிட்ட இவர், அக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினராகவும் பதவிவகித்து வந்துள்ளார்.

கடந்த ஏப்ரலில் நடைபெற்ற யாழ்.மாவட்ட தேர்தல் முடிவுகளை செல்லுபடியற்றதாக்கக் கோரி, உயர்நீதிமன்றத்தில் ஈ.பி.டி.பி. சார்பில் இவரே ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணம், சுன்னாகம், ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பொறுப்பாளராகப் பணியாற்றிய இவர், இரண்டு மாதங்களுக்கு முன்னராகவே மீண்டும் புத்தளம் திரும்பியிருந்தார் என்றும் தெரியவருகிறது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் புத்தளப் பொலிஸார் - கொலையாளிகள் பயன்படுத்திய சிவப்புநிற மோட்டார் சைக்கிளில் பதிவு இலக்கம் இல்லையெனத் தெரிவித்தனர்.

9 எம்.எம். ரக கைத்துப்பாக்கியே இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

தலையிலும் உடலிலும் 5 துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தை அடுத்து, புத்தளம் - தில்லையடிப் பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு, மேலதிக பொலிஸாரும் படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் சிவகுமார் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## மரண அறிவித்தல்



**திருமதி திலகவதி குமரவேல்**
**(செல்லம்)**

(பொது முகாமையாளர். சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்)

முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி குமரவேல் அவர்கள் நேற்று (18.09.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை, இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு.சி.குமரவேல் (தலைவர் சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான பரிபாலன சபை, தலைவர் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராமிய வங்கி சமாசத்தலைவர், சமாதான நீதவான், விவாகப் பதிவாளர் வலி. வடக்கு) அவர்களின் அன்பு மனைவியும், விதூஷனி (சுகாதாரக் கற்கைகள் பிரிவு, சமதர்ம மருத்துவத் துறை, யாழ். மருத்துவ பீடம்), ஜெயப்பிரணவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேஷ் குமார் (பொறியியலாளர், யாழ். மாநகரசபை) அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணானந்தன், திருமதி. சி.தர்மாவதி மற்றும் திலகரத்தினம் (வர்த்தகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வெற்றிவேலின் மைத்துனியும் மற்றும் செ.பொன்னம்பலத்தின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருவேரகம்,
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

(936)

தகவல் :
திரு.சி.குமரவேல் (கணவன்)
திரு. இ.சுரேஷ்குமார் (மருமகன்)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தெல்லிப்பழைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
# 82 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின சிறப்பு மலர்

## விழா நிகழ்ச்சிகள்

காலம் :- 19.09.2004 ஆம் திகதி
ஞாயிற்றுக்கிழமை
மு.ப 9.30 மணி.

இடம் :- சங்கத்தலைமைச் செயலகம்
துர்க்காபுரம்.

தலைமை :- திரு.சி.சிவமகாராசா அவர்கள்.

## முதன்மை விருந்தினர்

**திரு.செ.பத்மநாதன்** அவர்கள்
அரச அதிபர், யாழ்.மாவட்டம்.

**திரு.இ.இளங்கோவன்** அவர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,
வடக்கு கிழக்கு மாகாணம்

## கௌரவ விருந்தினர்கள்

**திரு. பந்து ரணவாக்க** அவர்கள்
தலைவர்,
தேசிய கூட்டுறவுச்சபை, கொழும்பு

**திரு. உதய ரஞ்ஜித் செனவரத்தினா**
பணிப்பாளர் நாயகம்
கூட்டுறவுக் கல்லூரி பொல்கொல்லை



## சிறப்பு விருந்தினர்கள்

**திரு. சி.இளம்பரிதி** அவர்கள்.
அரசியல்துறைப் பொறுப்பாளர்
யாழ்.மாவட்டம்

**திரு. சி.விஜிதரன்** அவர்கள்
நிர்வாகசேவைப் பொறுப்பாளர்
யாழ்.மாவட்டம்

**திரு. சு.முரளிதரன்** அவர்கள்
பிரதேச செயலர் வலிவடக்கு

**திரு. செ.கனகசபாபதி** அவர்கள்
யாழ்.கூ.ஆ.உ.ஆணையாளர்

**திரு. பொ.சிவலிங்கம்** அவர்கள்
யாழ்.கூ.அ.உ.ஆணையாளர் (கணக்காய்வு)

**திரு. சி.ஐயாத்துரை** அவர்கள்
யாழ்.கூ.அ.உ.ஆணையாளர்
(பனை, தெ.வளம்)

**திரு. சி.இளம்பிறைநாதன்** அவர்கள்
உ.பெ.முகாமையாளர் வடபிராந்தியம்

**திரு. சி.சிவபாதவிருதையர்** அவர்கள்
பிராந்திய முகாமையாளர் வடபகுதி

**திரு. பொ.கனகசபாபதி** அவர்கள்
யாழ்.கூ.சபைத் தலைவர்

**திரு. சி.குமரவேல்** அவர்கள்
கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர்

**திரு. ப.கனகலிங்கம்** அவர்கள்
வி.உ.நு.கூ.ச.சமாசத் தலைவர்

**திரு. சு.சிவசுப்பிரமணியம்** அவர்கள்
சி.க.உ.கூ.ச.சமாசத் தலைவர்

## 25 வருட கூட்டுறவுச் சேவைக்காக தங்கப்பதக்கமும் விருதும் பெறும் கூட்டுறவுப் பணியாளர்கள்


திரு.கா.சசிதரன்


திரு.சி.முருகையா


திரு.அ.வேல்முருகானந்தன்


திரு.த.கணேசமூர்த்தி


திரு.க.நவரத்தினம்


திரு.நா.நவரத்தினம்


திரு.சி.நாகேந்திரம்


திரு.ந.சகாதீசன்


திரு.க.மோகன்


திருமதி.த.பூரணம்


திரு.க.இராசதுரை


திரு.சி.இரத்தினசிங்கம்


திரு.மா.நடராசா


திரு.க.அமரசிங்கம்



# 25 வருட கூட்டுறவுச் சேவைக்காக பொன்னாடையும் விருதும் பெறும் குழுவினர்


திரு. எ. கந்தசாமி
கிளை 01


திரு. க. தவராசா
கிளை 01


திரு. க. வேலாயுதம்
கிளை 02


திரு. சு. பாலச்சந்திரன்
கிளை 05


திரு. க. விக்கினேஸ்வரன்
கிளை 05


திரு. க. வயிரவன்
கிளை 07


திரு. சி. பாலகுருநாதன்
கிளை 10


திரு. கா. மகேந்திரன்
கிளை 11


திரு. க. சுப்பிரமணியம்
கிளை 12


திருமதி. சி. பரமேஸ்வரி
கிளை 12


திரு. ப. பாலகிருஷ்ணன்
கிளை 12


திரு. வீ. பொன்னுத்துரை
கிளை 12


திரு. த. செல்லத்துரை
கிளை 13


திரு. ச. முத்துக்குமாரு
கிளை 13


திரு. ச. செந்தில்வேல்
கிளை 14


திரு. மு. சிவப்பிரகாசம்
கிளை 16


திரு. ஆ. சி. நடராசா
கிளை 17


திரு. க. சின்னத்தம்பி
கிளை 21


திரு. சா. துரைசிங்கம்
கிளை 21


திரு. சி. சின்னத்தம்பி
கிளை 22


திரு. சி. சுப்பிரமணியம்
கிளை 22


திரு. ச. தனபாலசிங்கம்
கிளை 23


திரு. க. செல்லப்பா
கிளை 25


திரு. பொ. கோபாலகிருஷ்ணன
கிளை 29


திரு. மா. நாகேந்திரசீலன்
கிளை 31


திரு. எ. தேவதிரவியம்
கிளை 32


திரு. க. தம்பிராசா
கிளை 35


திரு. மு. வெள்ளைத்தம்பி
கிளை 36


திரு. வ. செல்லத்துரை
கிளை 37


திரு. க. மாணிக்கம்
கிளை 39

## படம் கிடைக்கப்பெறாதோர்:

திரு. மு. பாரதிதாசன்
கிளை 09

திரு. சு. கதிரேசு
கிளை 20

திரு. வே. துரைச்சாமி
கிளை 24

திரு. வே. மாணிக்கன்
கிளை 26

திரு. க. தங்கராசா
கிளை 34

திரு. க. துரையன்
கிளை 39

## கூட்டுறவே நாட்டுயர்வு